Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 28 திங்கட்கிழமை (13.07.2015) | பக்கங்கள் 20 | ஓசை - 285

## ஓரிருவர் பிரிந்து செல்வதால் சுதந்திரக் கட்சி பிளவுபடாது

### கூறுகிறார் சுசில்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து இரண்டு மூன்று பேர் விலகிச் சென்றுள்ளமையானது, கட்சியை எந்தவிதத்திலும் பாதிக்காதென, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற ரீதியில்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.தே.க. முன்னணி உதயம் உடன்படிக்கை கைச்சாத்து



நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியை உருவாக்கும் புரிந்துணர்வு உடன்பாடு, நேற்றுக் காலை அலரி மாளிகையில் கையெழுத்திடப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதி உறுப்பினர்களுக்கும் இடையில் இந்த புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில், அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, பொதுச்செயலர் கபீர் காசிம் ஆகியோர் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் தலைவர் அத்துரலியே ரத்ன தேரர், அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, ஆகியோர் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிருப்தி அணி சார்பில், ராஜித சேனாரத்னவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சிவில் சமூகத்தினரும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

ஐ.தே.க.வின் யானைச் சின்னத்தின் கீழ் இந்த நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய் முன்னணி

19 ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரியை ஜனாதிபதியாக்கியது திருடர்களைப் பாதுகாக்கவா?

### கேட்கிறது ஜே.வி.பி.

திருடர்களைப் பாதுகாக்கவா மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி பதவியில் அமர்த்தினோம் என ஜே.வி.பி.யின் செயலாளர் விஜித ஹேரத் கேள்வி எழுப்பியுள்ளார்.


நிட்டம்புவ தங்கொள்ளவத்தை பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றிலேயே அவர் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர்,

மகிந்தவும் அவரது ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சியும் நாட்டையும் நாட்டு மக்களையும் அதள பாதாளத்திற்குள் தள்ளியது.

மகிந்த ராஜபக்ஷ, கப்பம் பெறுவோர், திருடர்கள், ஊழல் பேர்வழிகள், இலஞ்சம் பெறு

19 ஆம் பக்கம் பார்க்க



# மத்தியுடன் முரண்படாமல் மாகாணசபையை திறம்பட நடத்துங்கள்

## விக்கிக்கு அமெரிக்கா அட்வைஸ்

(கொழும்பு)

மாகாண சபையை திறம்பட நடாத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு கடுமையான அறிவுறுத்தலை அமெரிக்கா வழங்கியுள்ளது.

இது தொடர்பாக சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாண முதலமைச்சர், அமெரிக்காவுக்கும், பிரித்தானியாவுக்குமான தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டுள்ளார். அவர் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பிரதிச் செயலாளர் நிஷா பிஸ்வாலை கடந்த வியாழக்கிழமை சந்தித்துள்ளார்.

இதன்போதே விக்கிக்கு கடுமையான பாடத்தை நிஷா பிஸ்வால். நடத்தியுள்ளார். இனப்படுகொலை குற்றச்சாட்டுக்களுக்கு அப்பால் வடக்கின் நல்லிணக்கம், புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு விடயத்தில் முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இதற்கு மத்திய அரசுடன் இணங்கிச் செல்லுமாறும் பிஸ்வால், விக்னேஸ்வரனிடம் கேட்டுள்ளார்.

அத்துடன், மைத்திரிபால சிறிசேன-ரணில் விக்கிரமசிங்க அர

19 ஆம் பக்கம் பார்க்க

## வேட்பு மனுத்தாக்கல் இன்று நண்பகலுடன் நிறைவு

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று நண்பகலுடன் நிறைவடையவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் தேர்தலில் போட்டியிடவுள்ள பிரதான அரசியல் கட்சிகளும், சுயாதீனக் குழுக்களும் தங்களின் வேட்பு மனுக்களை இன்று தாக்கல் செய்யவுள்ளன.

எனவே உரிய நேரத்திற்குள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யுமாறு அனைத்து கட்சிகள்

19 ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் போராளிகளும் யாழ்.தேர்தல் களத்தில்

### இன்று காலை வேட்புமனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வகையில் ஜனநாயகப் போராளிகள் அமைப்பு யாழ்.மாவட்டத்தில் களமிறங்கவுள்ளதாக அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வித்தியாதரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

9 முன்னாள் போராளிகளுடன் நானும் யாழ். மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடவுள்ளோம். வேட்புமனுத்தாக்கல் இன்று காலை மேற்கொள்ளப்படும். இதன்போது தேர்தலில் போட்டியிடுபவர்களின் விபரங்களும் வெளியிடப்படும்.

முன்னாள் விடுதலைப் புலிகள் ஜனநாயகப் போராளிகள் அமைப்பாக வெளி வந்த காலம் தொடக்கம் அவர்கள் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையால் வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டு தென்னிலங்கையின் முகவர்களாக அவர்கள் செயற்படுகிறார்கள் என்பதேயாகும்.

நாங்கள் இந்த விடயத்தில் மிகக் கவனமாக இருக்கிறோம். எங்களைப் பொறுத்த வரையில் தேசிய மட்டத்தில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் என்பது மிக முக்கியமான விடயம். எங்களுடைய பிரசன்னத்தால் அதை பாதிப்படையச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எமக்கில்லை.

போராளிகள் அது குறித்து

19 ஆம் பக்கம் பார்க்க

## கிளி.பாரதிபுரத்தில் பிடிபட்டது கஞ்சா

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் 2 கிலோ பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இப் பகுதியில் நீண்ட காலமாக கஞ்சா விற்பனை இடம் பெறுவதாக மக்கள் வழங்கிய

19 ஆம் பக்கம் பார்க்க

## ஆஸியில் கத்திக்குத்து இரு தமிழர்கள் காயம்

### ஒருவரது நிலை கவலைக்கிடம்

(சிட்னி)

அவுஸ்ரேலியாவில் நேற்று முன்தினம் இரவு நடந்த கைகலப்பு கத்திக்குத்தாக மாறியதில் இரு தமிழர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

மெய்ப்பொருள் சமத்துவம் சகோதரத்துவம்

# உழைப்பாளிகளாக மாறினோம் மாற்றத்தை ஏற்படுத்தினோம்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார்





(கிளிநொச்சி)

மீள்குடியேற்றத்தின் பின்னா பாதிக்கப்பட்டு வந்த எங்கள் மக்களினதும், பிரதேசத்தினதும் மேம்பாட்டுக்காக உழைப்பாளிகளாக மாறினோம் கடுமையாக உழைத்தோம் ஐந்து வருடத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினோம் இதனை மனசாட்சியுள்ள அனைவரும் ஏற்றுக்கொள்வர் என ஈழமக்கள் ஜனநாயகக் கடசியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மற்றும் வன்னேரிக்குளம் பிரதேசங்களில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வுகளில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

கடந்த முப்பது வருடங்களாக நிலவிய வெற்றிடத்தை ஐந்து வருடங்களில் பூர்த்தி செய்துவிட முடியாது ஆனாலும் கிளிநொச்சியில் கடந்த ஐந்து வருடங்களில் எவரும் எதிர்பார்க்காத மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றோம். உட்கட்டுமான வசதிகள், வேலைவாய்ப்புகள், கல்வி, மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட பல விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றோம். இது வெறுமனே அறிக்கைகள் மூலமும், வாய்ப்பேச்சுகள் மூலம் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் அல்ல இந்த மாற்றத்திற்காக நாம் கடின உழைப்பை வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட எம்மக்களுக்கு விமர்சகர்களும், வாய்ச்சொல் வீரர்களும் தேவையில்லை மக்களுக்கான உழைப்பாளிகளே தேவை அதன் மூலமே மாற்றத்தை ஏற்படுத்த முடியும் இது எங்களின் கடந்த ஐந்து வருட அனுபவம். எனவே மக்கள் தங்களுக்காக உழைக்கக் கூடிய பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும் ஒவ்வொரு தேர்தல்களிலும் தங்கள் பிரதிநிதிகள் யார். என்பதனை அறியாமலே மக்கள் வாக்களித்து தெரிவு செய்துவிடுகின்றனர். மக்களின் வாக்குகளைப் பெற்று மக்கள் பிரதிநிதிகளாக வந்தவர்களும் மக்களின் மேம்பாட்டுக்கு எதுவும செய்யத் தேவையில்லை என்ற நிலையில் அடுத்த தேர்தல் வரை தாங்கள வசதியாக காலத்தை கழித்து விட்டுச் செல்கின்றனர்.

பின்னர் மக்களிடம் வந்து உணர்ச்சியாக போலித்தேசியத்தையும், போராட்ட தியாகங்களையும் கூறி மக்களின் வாக்கைப் பெற்று செல்கின்றனர். இதுதான தமிழர் அரசியலில் கடந்த பல ஆண்டுகளாக நடந்து வருகின்றது. இந்த அரசியல் கலாசாரம் மாற்றப்பட வேண்டும்.

வருகின்ற நாடாளுமன்ற தேர்தல் மக்களுக்கான தேர்தல் இதில் மக்கள்தான் வெற்றி பெற வேண்டும்.

எனவே மக்கள் நன்கு சிந்தித்து வாக்களிக்க வேண்டும். மக்களின் பெறுமதி மிக்க வாக்குகள் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கான முதலீடாக அமைய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# கசிப்பு விற்ற இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இரகசிய பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, ஏழாலை தெற்கு மயிலங்காடுப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவரை கடந்த சனிக்கிழமை இரவு கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.வீ.எல்.துஷ்மந் தெரிவித்தார்.

இரகசிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டினை முற்றுகையிட்ட பொலிஸார், 46 கசிப்பு போத்தல்களையும் மீட்டுள்ளனர்.

இவ்விடயம் குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

# கெங்காதரன் குடியிருப்பினை அபிவிருத்தி செய்யக் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பினை அபிவிருத்தி செய்யும்படி கிராம அபிவிருத்திச் சங்கம் கிளிநொச்சி மாவட்டச் செயலரிடம் மனுக்கையளித்துள்ளது.

இக்கிராமத்தின் வீதிகள் புனரமைக்கப்படவில்லை. குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றது. பொதுவாகவே அடிப்படை வசதிகளற்ற நிலையில் காணப்படும் இக்கிராமத்தினை அபிவிருத்தி ரீதியாக முன்னேற்றித்தரும்படி கிராம அபிவிருத்திச் சங்கம் மாவட்டச்செயலரிடம் மனுக்கையளித்துள்ளது.

மாவட்டச் செயலர் அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பினை எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்குள் உள்வாங்கி அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக பதிலளித்திருப்பதாக கெங்காதாரன் குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (160)

# புனரமைக்கப்படாத வீதி; மின்சார வசதியும் இல்லை

முல்லைத்தீவு துணுக்காய் அம்பலப்பெருமாள்குளம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கல் இடம்பெறவில்லையெனவும் கிராமத்தின் முதன்மைவீதி புனரமைக்கப்படவில்லையெனவும் கிராம அபிவிருத்திச் சங்கம் துணுக்காய்ப் பிரதேச செயலரிடம் மனுக்கையளித்துள்ளது.



103 குடும்பங்கள் மீள் குடியேற்றம் இடம்பெற்றுள்ள இக்கிராமத்தில் மின்கம்பங்கள் நாட்டப்பட்டு மூன்று மாதங்கள் கடந்தநிலையிலும் மின்வழங்கல் இடம்பெறவில்லை.

1968 இல் உருவாக்கப்பட்ட இக்கிராமத்தில் நிரந்தரவீதி இதுவரை அமைக்கப்படவில்லை. விவசாயத்தினை உயிர்நாடியாகக் கொண்டு வாழ்கின்ற தமது கிராமத்திற்கு விரைவான அடிப்படை வசதிகளை உருவாக்கித்தரும்படியும் தமது மனுவில் கிராம அபிவிருத்திச் சங்கம் பிரதேச செயலரிடம் வேண்டியுள்ளது. (160)

# பொதுக்கூட்டம்

வலி.வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவையின் விசேட பொதுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கலாசாரப்பேரவைத்தலைவரும் பிரதேச செயலருமாகிய க.சிறிமோகனன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்விசேட கூட்டத்தில் 2015ஆம் ஆண்டுக்கான புதிய உறுப்பினர்கள் தெரிவு, பிரதேச கலை கலாசார செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கலாசார விழா தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே, அனைத்து கலாசார பேரவை உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கலாசார பேரவைத்தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வீதி ஒழுங்கு விதிகளை மீறியவர்களுக்கு தண்டம்

கிளிநொச்சிப் பகுதியில் வீதி ஒழுங்கு விதிகளை மீறியும், உரிய ஆவணங்கள் இன்றியும் மோட்டார் வாகனம் செலுத்திய சாரதிகளுக்கு 23 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன், உத்தரவிட்டார்.

கிளிநொச்சி, பளைப் பகுதிகளில் அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வரியனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திச் சென்றோரை கைது செய்த கிளிநொச்சி, பளை பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான சாரதிகளுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

பளைப்பகுதியில் காப்புறுதிப் பத்திரம், வரியனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 6,500 ரூபாவும் பொலிஸாரின் சைகையை மீறியவருக்கு 1,500 ரூபாவும் தவறான முறையில் வாகனம் செலுத்தியவருக்கு 1500 ரூபாவும தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் வரிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய மூவருக்கு தலா 1,500 ரூபாவும் மோட்டார் சைக்கிளில் மேலதிக பாரம் ஏற்றிச் சென்ற ஒருவருக்கு 1,000 ரூபாவும் தெளிவற்ற இலக்கத்தகடு வைத்திருந்த மூவருக்கு தலா 500 ரூபாவும் விதித்து தீர்ப்பளித்தார்.








மந்திகையில் பொதுச் சந்தைக் கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் பூ.சஞ்சீவன் கட்டடத்தை திறந்து வைப்பதையும், கலந்து கொண்டவர்களையும் சந்தைக் கட்டடத்தையும் காணலாம். (18)



தாயக உறவுகளைத் தலை நிமிரச் செய்வோம் என்ற சமூகப்பணி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வலி.மேற்கு சங்கானை மத்தி கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உள்ள வறுமைநிலையில் காணப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்ட போது...

# தொண்டைமானாற்றில் மடம் மீள் நிர்மாணம்

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய கனகர் அன்னதான மடம் புனரமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அன்னதான மடத்தை முறையாக பராமரிப்பதற்காக ஏற்பாடாக புதிய நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு ஓம் சரவணபவ மண்டபம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

16 பேர் அங்கம் வகிக்கும் இந்த மண்டப நிர்வாக சபையின் தலைவராக காசி கனகரத்தினமும் செயலாளராக அ.கலை மோகன் ராஜ்யும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சந்நிதி முருகன் ஆலயத்திற்கு வரும் அடியார்களின் வசதி கருதி புனரமைக்கப்பட்டுள்ள இந்த அன்னதான மண்டபம் அடியார்களுக்கு சிறந்தசேவையை வழங்குமென புதிய நிர்வாக சபையின் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.

# பிரதோஷ நாளில் சிவனை வணங்குவது எப்படி?



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானுக்குரிய சிறந்த விரதம் பிரதோஷ விரதம். இந்தப் பிரதோஷ நாளில் சிவனை வணங்குவது எப்படி? ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையைக் கூறுகின்றார்கள். அப்படியாயின் சரியான வழிபாட்டு முறை எது?

முதலில் பிரதோஷ காலம் எது என்பதை நாம் சரியாக அறிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு மாதத்திலும் வளர்பிறை தேய்பிறைகளில் வரும் 13 ஆவது நாளா ப திரயோதசி திதியே பிரதோஷம் எனப்படும். சூரிய அஸ்தமனத்துக்கு முன்னதாக மாலை 4.35 மணி முதல் 6 மணிவரையே இது அனுஷ்டிக்கப்படுகின்றது. அதுவும் சனிக்கிழமையில் வந்தால் மிகச் சிறந்த மகாபிரதோஷம் என அழைக்கப்படுகின்றது. விரதம் ஆரம்பிப்பவர்கள் சனிப்பிரதோஷத்திலிருந்து ஆரம்பிக்கலாம்.

விரதமிருக்கும் அடியார்கள் பிரதோஷ நாள் முழுவதும் சிவ சிந்தனையுடன் தேவார திருவாசகங்களை ஓதியவண்ணம் இருத்தல் வேண்டும். பிரதோஷ நேரத்தில் சிவலிங்கப் பெருமானை நந்தியெம்பெருமானுடைய இரு கொம்புகளுக்கு மத்தியிலே கண்டு தரிசிக்க வேண்டும். உலக நலம் விரும்பி சிவபெருமானை நந்திதேவரின் கொம்புகளுக்கு நடுவே திருநர்த்தனம் புரிகின்றார் என்று சொல்லப்படுகின்றது.

முதலில் மூலஸ்தான சிவனை வணங்கி நந்தியையும் வணங்கி இடமாகச் சென்று சண்டேஸ்வரனை வணங்குதல் வேண்டும். பின்பு அப்படியே திரும்பி வந்து சிவனையும் நந்தியையும் வணங்கி ஆலயத்தை வலம் வந்து சண்டேஸ்வரர் இருக்குமிடம் சென்று அவரை வழிபட்டு அப்படியே திரும்பி வந்து முன்போல் சிவனையும் நந்தியையும் வணங்குதல் வேண்டும். இவ்வாறு மும்முறை வணங்கி விட்டு கோமுகித் தீர்த்தம் வரும் தொட்டியைக் கடக்காமல் சண்டேஸ்வரரை வழிபட்ட பாதையால் மீண்டும் செல்ல வேண்டும் இதுவே பிரதோஷ வழிபாட்டு முறையாகும்.

"கலாபூஷணம்"
இராசையா ஸ்ரீதரன்.

# கஞ்சா விற்பனை; சந்தேக நபர் கைது

(முள்ளியவளை)

நீண்ட காலமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுவந்த நபர் முள்ளியவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முள்ளியவளை கணுக்கேணி எனும் பகுதியைச் சேர்ந்த 45 வயது மதிக்கத்தக்க நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

முள்ளியவளைப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் முள்ளியவளை தலைமைப் பொலிஸ் அதிகாரி ரமேஸ் இரத்தினசிங்கம் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட தேடுதலின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டதோடு, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நபரை பொலிஸார் நேற்று ஆஜர்படுத்திய போது இம்மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார.(125)

# வேலையற்ற இளைஞர்களுக்கு தொழில் வழங்குவதே எமது இலக்கு

## யாழ்.முதன்மை வேட்பாளர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

தொழில்வாய்ப்புக்களை உருவாக்கி அதனூடாக வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு உரிய வேலைவாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதே எமது நோக்கமாகுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமையலுவலகத்திற்கு வருகைதந்திருந்த குருநகர் விக்ஸ் விளையாட்டுக் கழக உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் எப்போதுமே சொல்லுக்கு செயல் வடிவம் கொடுப்பவர்களாகவே இருக்கின்றோம்.

இதை விடுத்து நாம் உண்மைக்கு புறம்பாக எதனையும் ஒருபோதும கூறுவதில்லை.

இன்றுள்ள நிலையில் தென்னிலங்கையில் மட்டுமன்றி வட இலங்கையில் குறிப்பாக தமிழ்த் தலைமையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். அது காலத்தின் கட்டாயமுமாகும்.

இவ்வாறாக மாற்றம் ஒன்று ஏற்படும் பட்சத்திலேயே புதிதாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி அதனூடாக வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அந்தவகையில் வெற்றிக்காக யாவரும் ஒன்றிணைந்து பங்காற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

# இருவர் கைது

(முல்லைத்தீவு)

விசா வரையறைகளை மீறி சட்டவிரோதமாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட இந்தியப் பிரஜைகள் இருவர் முல்லைத்தீவு - செல்வபுரம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே இக்கைது இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர்கள் சுற்றுலா விசாவில் நாட்டிற்கு வந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மேலும் இவர்கள் முல்லைத தீவு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன். சந்தேகநபர்களை மீண்டும் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.







யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பிரிவின் வரலாற்றில் முதன் முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோது...

புகழ்தான் நம்மைத் தேடி வர வேண்டும் நாம் அதைத் தேடிப் போகக்கூடாது. - எம்.ஜி.ஆர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## முடியாது என்றால் முடியாதுதான்!

நமது மக்களின் துன்பங்கள் தொடர்வதற்கும், பிரச்சினை தீராமலிருப்பதற்கும் நம் ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு காரணங்கள் இருக்கக் கூடும். சிலர் அப்போதைக்கிருக்கும் அரசாங்கம்தான் காரணம் என்று சொல்லக் கூடும்.

இன்னும் சிலர் இந்த நாட்டில் இதுவரை இருந்த, இனி வரப் போகும் எல்லா அரசாங்கங்களுமே காரணமென்னக் கூடும்.

வேறு சிலர் இந்தியாவையும் அதேபோல் அமெரிக்காவை, சீனாவை, ரஷ்யாவை, முழு சர்வதேசத்தையும் விரல் நீட்டக் கூடும். மேலும் பலர் இந்த எல்லாமே காரணங்கள்தான் என்று விளக்கம் வைத்திருக்கக் கூடும்.

யார் கண்டது, சோதிடத்தை, கிரக பலன்களைக் காரணமாய்ச் சொல்லக் கூடியவர்களும் இருக்கக் கூடும்.

நம்மிடமிருந்த – இருக்கும் பிழைகளும்தான் காரணம் என்று இன்று சிலருக்கேனும் தோன்றலாம். இவர்களோடு தான் இந்த விஷயம் குறித்து நாம் விவாதிக்க முடியும்.

தமிழ் மக்களின் தலைவர்களாகச் சொல்லிக் கொள்பவர்கள், மற்ற எல்லோரினதும் பிழைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, தாங்கள் செய்யவேண்டிய முயற்சியைச் சொல்கிறார்களுமில்லை; செய்கிறார்களுமில்லை.

உதாரணத்துக்கு, இலங்கை அரசாங்கமோ, இந்தியாவோ, சர்வதேசமோ என்ன தீர்வைச் சொல்கின்றன... ஏன் தீர்வை வைக்கவில்லை என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்களே தவிர, இவர்கள் தாங்கள் கேட்கும் தீர்வு என்ன என்பதைச் சொல்வதில்லை.

இவர்கள் ஒரு தீர்வுத் திட்டத்தை வைத்து, அதற்கு இந்தியாவின், சர்வதேசத்தின், நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களின் ஆதரவைத் திரட்டி முயற்சிப்பதை விடுத்து, இந்த நாட்டில் தீர்வொன்று சாத்தியமேயில்லை என்ற அவநம்பிக்கையையே வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தேர்தல் வந்தால் மட்டும் பேரம் பேசித் தீர்வை எடுப்பதற்குரிய அதிக பலத்தை எமக்குத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறார்கள். பலத்தை வைத்துக்கொண்டு இதுவரை எதைத்தான் அரக்கினீர்கள் என்றால் எந்தப் பதிலுமில்லை.

இவர்கள் தங்களால் முடியும் என்று நம்பி எதையும் செய்வதில்லை; எதுவும் முடிந்துவிடக் கூடாதே என்று நினைத்துக் கொண்டே செயற்பட்டால் எதுதான் சாத்தியப்படும்?

முதலில் நமது தேவை என்னவென்பதை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். அதற்கான ஆதரவை நாட்டுக்குள்ளும் சர்வதேச ரீதியாகவும் திரட்டிக்கொண்டு நம்மால் பேசி, இணங்க வைத்து எடுக்க முடியும் என்று நம்பிக்கை கொள்ளாமல் எதையும் சாதிக்க முடியாது.

முடியும் என்று மனதை வைத்தால்தான் முடியும் என்பதற்கு இந்த உதாரணம் சொல்லப்படுவதுண்டு. 30 அடி நீளமும் ஒரு அடி அகலமும் கொண்ட ஒரு பலகையை நிலத்தில் போட்டுவிட்டு நடக்கச் சொன்னால், பலகையின் ஒருபுறத்திலிருந்து மறுபுறத்திற்கு அடிசறுக்காமல் எவராலும் நடந்துசெல்ல முடியும்.

ஆனால் இதே பலகையை உயர்ந்த இரு கோபுரங்களுக்கிடைய்ய ஆகாயத்தில் வைத்துவிட்டு அவ்வளவு உயரத்தில் நடக்கச் சொன்னால், இரண்டடி நடக்கு முன்னரே கைகால்கள் நடுங்கத் தொடங்கும். சில அடிதூரம் நடப்பதற்குள் கால்கள் பின்னி விழுந்துவிட நேரும்.

காரணம் இதுதான்: பலகை நிலத்தில் கிடக்கும்போது நடப்பது இலகுவென்று மனம் நினைக்கிறது. ஆனால் உயர்த்தப்பட்டதும், நாம் விழுந்துவிடுவோம் என்று மனம் நினைக்கிறது. உடனே பயத்தால் நடுங்குகிறோம். நாம் விழப்போகிறோம் என்ற எண்ணம் தோன்றியதும் அதற்கு முன்னால் நமது முயற்சிகள் விணாகிவிடுகின்றன; தோல்வி பெறுகின்றன.

ஆமாம், நம்மால் முடியாது என்று எண்ணுபவர்களுக்கு எதுவுமே முடியாதுதான்.

- ஆசிரியர்.

# மும்மொழிக் கொள்கை அமுலாக்கம்

# இந்தியாவின் உதவிகள் தொடரும்

## இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சிங்ஹா மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் அக்குரஸ்ஸ பகுதியில் மொழி ஆய்வுகூடமொன்றை அண்மையில் திறந்து வைத்துள்ளனர்.

நில்வளா தேசிய கல்வியியல கல்லூரியில் இதற்கான நிகழ்வு இடம்பெற்றதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டையிலுள்ள இந்திய கொன்சூலர் நாயகம் ராஜகுமார், கல்வி அமைச்சின் தமிழ் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் முரளிதரன் மற்றும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கை இளைஞர்களின் திறன் விருத்திக்கு அடித்தளம் அமைக்கும் வகையிலான இந்தியாவின் திட்டத்திற்கு வெளிவிவகார அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார்.

பல்வேறு துறைகளில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி உதவித் திட்டங்களுக்கு இந்திய அரசாங்கம் இலங்கைக்கு உதவி வழங்குவதாக இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சிங்ஹா சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் மும்மொழிக் கொள்கை வேலைத் திட்டத்தில் பங்குதாரராக இந்தியா இருப்பதில் மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் இந்திய அரசாங்கத்தினால் மொழி ஆய்வு கூடங்கள் நிறுவப்பட்டு வருவதுடன், ஏற்கனவே மேல், மத்திய, வட மேல், மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்த ஆய்வு கூடங்கள் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொகுதி அமைப்பாளராக துமிந்த

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கலாவெவ தொகுதி அமைப்பாளராக அமைச்சர் துமிந்த திசாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்நியமனத்தை வழங்கினார்.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை விட்டு நல்லாட்சிக்கான முன்னணி என்கிற அமைப்பின் ஊடாகதான் எக்காரணத்தை முன்னிட்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் சாயப் போவதில்லை என துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

## ஜே.வி.பி. மீது கண்டனம்

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்க ஜே.வி.பி. மறைமுகமாக வழி வகுக்கின்றது என்று முன்னிலை சோசலிஸக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

மஹரகமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே முன்னணியின் உறுப்பினர் துமிந்த நாகமுவ, ஐக்கிய தேசியக் கட்சியின் நலன்களை பாதுகாக்கும் வகையிலான நடவடிக்கைகளையே ஜே.வி.பி மேற்கொள்வதாக குற்றம் சுமத்தினார்.

கடந்த சில மாதங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்காகவே ஜே.வி.பி செயற்பட்டதாகவும் அவர மேலும் குறிப்பிட்டார். இரண்டு கட்சிகளும் நாடாளுமன்றத்தில் ஒரே பக்கத்திலேயே நின்று செயற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே தொடர்ந்தும் ஜே.வி.பி இடதுசாரி கட்சியா என்பதில் சந்தேகம் உள்ளதாக நாகமுவ கேள்வி எழுப்பினார்.

## வெற்றிலையில் போட்டி இ.தொ.கா. தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனது சேவல் சின்னத்தில் போட்டியிடாமல், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்திலேயே களமிறங்குகிறது.

இதற்கான வேட்பு மனுவில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் நேற்று கைச்சாத்திட்டார்.

இ.தொ.கா.தலைவர் முத்து சிவலிங்கம், உப தலைவி அனுஷா சிவராஜா ஆகியோர் கூட்டமைப்பு சார்பில் இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர்.

## தேசிய பூங்காக்கள் மூலம் இப்போது அதிக வருமானம்

(கொழும்பு)

கடந்த ஆறு மாதங்களில் சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் உள்ள தேசிய பூங்காக்களைப் பார்வையிட்டதன் மூலம் சுமார் 200 மில்லியன் ரூபா வருமானம் பெற்றதாக தேசிய பூங்காக்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி முதல் யூன் வரையிலான ஆறு மாத காலப் பகுதியில் பேராதனை, ஹக்கல, மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அவிசாவளை, அம்பாந்தோட்டை முதலான தேசிய பூங்காவுக்கு சுற்றுலாப் பயணிகள் இக்காலப்பகுதியில் அதிகளவில் வருகை தந்து பார்வையிட்டுள்ளதாகவும் அதன் பயனாக 20 கோடி ரூபா ஈட்டப்பட்டுள்ளதாகவும் திணைக்கள அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதில் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் 9 இலட்சத்து 35 ஆயிரம் பேரும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் பேரும் பார்வையிட்டுள்ளதாக அனுமதிச் சீட்டு விற்பனை மூலம் தெரியவந்துள்ளதாகவும் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டி.எச்.பி. பெரமுனுகம தெரிவித்துள்ளார்.

இவர்களில் 85 சதவீதமானவர்கள் பேராதனைப் பூங்காவிற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தடம் மாறினார் ஜெயந்த

(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி உப தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெயந்த கெடகொட எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு சார்பில் கொழும்பில் போட்டியிடுகிறார்.

அதற்கான வேட்பு மனுவிலும் அவர் கைச்சாத்திட்டிருப்பதாக மகிந்த ஆதரவு அணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இவர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.


## புங்குடுதீவு கொலை வழக்கு பின்வாங்கினார் கே.வி.தவராசா

### பின்னணி குறித்து கிளம்புகிறது சந்தேகம்

புங்குடுதீவில் கூட்டுப் பாலியல் வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட மாணவி வித்தியாவின் வழக்கில் பிரபல சட்டத்தரணி கே.வி.தவராசா இனி முன்னிலையாக மாட்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதியும் வியாபாரியுமான ஒருவர் வித்தியாவின் மரணத்தையும் வேறு சிலருடன் சேர்ந்து வியாபாரமாக்கி விசமத்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுகிறார் எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இவர்கள் வித்தியாவின் தாய்கும் சகோதரனுக்கும் கொடுத்து வந்த அழுத்தம் காரணமாகவே சட்டத்தரணி தவராசா இந்த வழககில் இருந்து விலகிக் கொண்டார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த வழக்கில் முன்னிலையான சட்டத்தரணி தவராசா வழக்கில் மறைந்துபோன பல மர்மங்கள் வெளிவரக் காரணமாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.




# கடலில் எண்ணெய்க் கசிவு

கடந்த மே மாதத்தின் மத்தியில் அமெரிக்க நகரான சாண்டா பார்பராவில் கடலில் எண்ணெய்க் கசிவு கலப்பது பற்றியதான செய்திகள் பரபரப்பயூட்டின. 1969இல் இதே நகரில் ஏற்பட்ட பெரும் கசிவு போல் இப்போதும் விளைவுகளை ஏற்படுத்துமோ என்ற கவலை இருந்தது.

1969இல் ஏற்பட்டது, யுனோகல் (Unocal) என்கிற ஒரு எண்ணெய் எடுக்கும் நிறுவனத்தின் பாதுகாப்பு முறைகள் சரியாக இல்லாததால் ஏற்பட்ட கசிவு. மிகப் பிரமாண்டமான அந்த எண்ணெய்க் கசிவு கடலில் கலந்ததால், ஏகப்பட்ட கடல் வாழ் உயிரினங்கள் அழிந்ததோடல்லாமல், இதர பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் பாதக விளைவுகளையும் ஏற்படுத்தியது.

சுமார் 3 மில்லியன் காலன் அளவு எண்ணெய் கடல் நீரில் கலந்தது. 35 மைல் வரை கலிபோர்னியா மாகாணத்தின் பசிபிக் கரைகளில் மிதந்த அந்த எண்ணெய், பலவித கடல் வாழ் உயிரினங்களையும் தாவரங்களையும் மிகவும் பாதித்தது.

அன்று அந்தக் கசிவை நிறுத்த ஒரு மாதத்திற்கும் மேல் ஆனது. அந்த 1969ஆம் வருடக் கசிவுதான் அமெரிக்காவின் எண்ணெய் எடுக்கும் முறைகளில் பலவித கட்டுப்பாடுகளும் மாற்றங்களும் உருவாகக் காரணமாயிற்று. சுற்றுச் சூழல் விழிப்புணர்வும் அதிகமானது அப்போதிலிருந்துதான் என்பார்கள்.

தற்போதும் அதே நகரில் அதே போல் ஒரு எண்ணெய்க் கசிவு ஏற்பட்டதும் பழைய விளைவுகள் அனைவருக்கும் நினைவு வந்தன. இந்த முறை கசிவு, எண்ணெய் எடுத்துச் செல்லும் குழாய்களிலிருந்து ஏற்பட்டது. இது அந்தப் பழைய கசிவு போல் அதிகம் இல்லை. 9 மைல் அளவு கடலில் எண்ணெய் மிதந்தது.

தொழில் நுட்பம் அதிகரித்துள்ள இந்தக் காலகட்டத்தில், இந்தக் கசிவு வெகு விரைவிலேயே - சில மணி நேரங்களிலேயே - கட்டுப்படுத்தப் பட்டுவிட்டது. ஆனால் அதற்குள் கடலுள் கலந்த எண்ணெயின் அளவு 105,000 கலன்கள்!

1991இல் நடந்த வளைகுடாப் போருக்குப் பின்னர் இது போல் ஏற்பட்ட கசிவு பற்றி நினைவுக்கு வருகிறது. பெர்ஷியன் வளைகுடாவில் ஏற்பட்ட அந்தக் கசிவு அரபிக் கடலில் கலந்து, தெற்காசிய நாடுகளையும் இரண்டு வருடங்களில் பாதிக்கும் என்று அப்போது சொல்லப்பட்டது.

அந்தக் கசிவினால் பாதிக்கப்பட்டு, உடல் முழுவதும் எண்ணெய் படர்ந்து இறக்கைகளை, உடலை நகர்த்தக் கூட முடியாமல் இருந்த பல கடல் வாழ் உயிரினங்களின் படங்கள் அப்போது பத்திரிகைகளில் நிறைய வெளியாயின. பார்க்க மிகப் பரிதாபமாக இருந்தது.

நல்ல வேளையாக கசிவு அந்தப் பகுதியிலேயே நின்று விட்டது. அரபிக் கடல் வரையிலும் வரவில்லை. அன்று பெரும்பாலான கசிவை அமெரிக்கா எரித்தே தீர்த்தது.

ஆனால் எண்ணெய்க் கசிவினால் ஏற்படும் அபாயம் முழுவதுமாக நீங்கவில்லை. பொதுவாக இப்படிப் பட்ட எண்ணெய்க் கசிவுகள் மீண்டும் மீண்டும் வரக்கூடியன. எண்ணெய்க் கிணறுகள் வெடிப்பு, குழாய்கள் மூலம் ஏற்படும் கசிவு தவிர எண்ணெய் எடுத்துச் செல்லும் கப்பல்கள், அல்லது மூழ்கிவிடும் கப்பல்களின் டாங்க்கில் இருக்கும் எண்ணெய் என்று கசிவின் காரணங்கள் பல இருக்கும்.

1989இல் எக்சன் வால்டெஸ் (Exxon Valdez) என்ற கப்பல் பவளப் பாறைகளில் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் பெற்ரோலியம் கடலில் கொட்டியது. அப்படிக் கொட்டிய எண்ணெயின் அளவு, 11 மில்லியனிலிருந்து 38 மில்லியன் கலன்கள் வரை இருக்கும் என்று சொல்லப்பட்டது. சிறிதும் பெரிதுமாக இப்படி கடலில் எண்ணெய் கொட்டுவது நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது. கசிவு சிறியதாக இருந்தால் விரைவிலேயே சிறு சிறு பாகங்களாய் கடலிலேயே சிதறி நீர்த்து விடும். கடலில் கொட்டும் எண்ணெயின் அளவு அதிகமாய் இருக்கும்போது அதைக் கட்டுப் படுத்துவதும் நீக்குவதும் கடினம்.

கடல் வளத் துறை ஆய்வின்படி, அரபிக் கடலில் சுமார் 324 கசிவுகள் ஓர் ஆண்டில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அவற்றில் 135 கசிவுகள் பல்வேறு அளவில் தெற்காசியக் கடலோர வாழ்க்கையை பாதிக்கும் என்று கடலில் எழும்பும் அலைகளை கவனித்து அனுமானிக்கப்படுகிறது.

நடுக் கடலிலேயே கசிவு அடங்கி விட்டால் அல்லது கட்டுக்குள் நின்றுவிட்டால் பாதிப்பு குறைவாக இருக்கும். கரைக்கு அருகில் பல தாவர மற்றும் இதர உயிரினங்கள்

**கசிவை அகற்றும் பணி ஒரு பிரமாண்டமான செயற்பாடு. பெரிய பெரிய பலூன் (booms) போன்றவற்றை எண்ணெயை சுற்றிலும் மிதக்கவிட்டு, என்ணெய் மேலும் பரந்து மிதக்காமல் கட்டுப்படுத்துவது முதல் பணி. அதன் பின் மேலே படர்ந்து இருக்கும் எண்ணெயை கொஞ்சம் கொஞ்சமாக தயிரில் வெண்ணெய் எடுப்பதுபோல் இயந்திரங்கள் மூலம் மேலாக லாவகமாக எடுக்க ஆரம்பிக்க வேண்டும். இவற்றைப் பெரிய பெரிய பீப்பாய்களில் சேர்த்து பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவார்கள்.**

அதிகம் இருக்கிறபடியால் கரைக்கு அருகில் அந்தக் கசிவு ஒதுங்கும்போது வரும் பாதிப்பு அதிகம். அதனால் கசிவு ஏற்பட்டு 15 நாட்களுக்குள் கரையில் ஒதுங்கும் எண்ணெயால் பாதிப்பு அதிகம்.

சரிஷ் கடலில் எண்ணெய்க் கசிவினால் ஏற்படும் விளைவுகள் என்ன?

எண்ணெயில் இருக்கும் எடையில் இலேசான பொருட்கள் ஆவியாகி காற்றில் கலந்துவிடும். அல்லது இயற்கையான உருமாற்றம் மற்றும் உயிரியல் தரவீழ்ச்சி (bio degradation) ஏற்பட்டு மறைந்துவிடும். ஆனால் அதிலுள்ள கனமான பொருட்கள் கடலிலேயே தங்கி, கடல் வாழ் உயிரினங்களின் உடலில் எண்ணெய்ப் பூச்சாகப் படிந்து விடுவதால், சுலபமாக நகர முடியாமலும், உணவு தேட முடியாமலும், மூச்சு முட்டியும் பல உயிரினங்கள் மடியும்.

அதுவும் பெற்ரோலியத்தில் பல வித நச்சுப் பொருட்கள் (toxic components) இருப்பதால் அவற்றை உட்கொள்ளும் உயிரினங்கள் இறந்து போவதோடல்லாமல் புதிய உயிர்கள் பிறப்பதையும் அவை தடுத்துவிடும். இதனால் பல உயிரினங்கள் நாளடைவில் மறைந்து போகும் அபாயம் இருக்கிறது.

கடல் பறவைகளும், திமிங்கலம் போன்ற குட்டி ஈனும் உயிரினங்களும் மிகுந்த பாதிப்புக்குள்ளாகும். அவற்றின் இறக்கைகளிலும், உடல் மேலும் தண்ணீர் ஒட்டாமல் இருக்கும் வகையில் இயற்கையிலேயே அமைப்பு அமைந்துள்ளது. அவற்றின் மீது எண்ணெய் படரும்போது இந்த இயற்கை மேல் பூச்சுகள் அழிந்து இந்த உயிரினங்கள் தங்கள் உடலின் மேல் எந்த பாதுகாப்புமின்றி இயற்கையின் தட்ப வெப்ப நிலையை சமாளிக்கும் சக்தியின்றி தத்தளிக்கும்.

தவிர பெற்ரோலியத்தின் நச்சுப்பொருட்கள் உடலின் உள்ளே செல்வதால் இந்த உயிரினங்களின் வாழ்க்கை முறையிலும் இயற்கைக்கு மாறாக பல வித மாற்றங்கள் ஏற்படும். இந்த உயிரினங்களுக்கு பிறக்கும் அடுத்த தலைமுறைக்கு பலவித உடல் நலக் கூறுகள் இருக்கும்.

1981இல் பிரிட்டனில் நடந்த மற்றொரு ஆய்வின்படி, கடலுக்கடியில் இருக்கும் தாவர வகைகளுக்கும் இதர மீன் வகைகளுக்கும் இத்தனை பாதிப்பு இருக்காது என்று சொல்லப்படுகிறது. 1967இல் நடந்த ஒரு கப்பல் விபத்தில் வெளியான கசிவில் பில்சார்ட் மீன் என்ற மீன் வகையின் முட்டைகள் பாதிக்கப்பட்டாலும் அடுத்த தலைமுறை மீன்கள் பிழைத்தன என்று இந்த ஆய்வு கூறுகிறது.

உயிரனங்கள் தவிர கரையோரம் இருக்கும் சதுப்பு நிலக் காடுகளும் இதர கரையோர இயற்கை சுழற்சியும் (ecosystem) பாதிக்கப்படும். ஆனால் சில சமயம் இயற்கையான தர வீழ்ச்சி முறையில் இந்தக் கசிவின் பாதகங்கள் மறையலாம். கசிவின் சில கனமான பொருட்கள் கெட்டியாக உருண்டு திரண்டு ஒரு ஜவ்வு போன்று கடலின் இதர பொருட்களோடு ஒன்றாக மாறி விடலாம். கெட்டியாக மாறிய இந்தப் பந்து போன்றவை நாளடைவில் தரையில் ஒதுங்கும்போது அவற்றை எடுத்து நீக்கி விடமுடியும்.

கசிவை அகற்றும் பணி ஒரு பிரமாண்டமான செயல்பாடு. பெரிய பெரிய பலூன் (booms) போன்றவற்றை எண்ணெயை சுற்றிலும் மிதக்கவிட்டு, என்ணெய் மேலும் பரந்து மிதக்காமல் கட்டுப்படுத்துவது முதல் பணி. அதன் பின் மேலே படர்ந்து இருக்கும் எண்ணெயை கொஞ்சம் கொஞ்சமாக தயிரில் வெண்ணெய் எடுப்பதுபோல் இயந்திரங்கள் மூலம் மேலாக லாவகமாக எடுக்க ஆரம்பிக்க வேண்டும். இவற்றைப் பெரிய பெரிய பீப்பாய்களில் சேர்த்து பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவார்கள்.

ஆனால் கடல் காற்றும் அலையும் பெரிதாக இருக்கும் பட்சத்தில் இந்த முறையில் அகற்றுவது கடினம். அதனால் எண்ணெயைக் கலைக்கும் இரசாயன ஸ்ப்ரே உபயோகித்து சிறு சிறு துகள்களாக மாற்றிக் காற்றில் கலக்க அல்லது கடல் நீரில் சிதற வைத்து இயற்கை தர வீழ்ச்சி நடக்க வழி செய்வது ஒரு முறை. ஆனால் எண்ணெய்க் கசிவை விட இந்த இரசாயனப் பொருட்கள் அதிகம் பாதிப்பை ஏற்படுத்தும் அபாயமும் உள்ளது.



(18ஆம் பக்கம் பார்க்க)



# அதிகார பகிர்வு தருவேன்

(கொழும்பு)

தமிழர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையாக மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரம சிங்க உறுதியளித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் ஆகஸ்ட் 17ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிறப்பு மாநாட்டில் பேசும்போது இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:

ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்றார்.

முந்தைய போர்ப் பகுதிகளில இராணுவ நோக்கங்களுக்காக கையகப்படுத்தப்பட்ட தனியார் நிலங்கள் தேர்தல் முடிந்ததும் உடைமைதாரர்களிடமே மீண்டும் ஒப்படைக்கப்படும் .


விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் 2009இல் முடிந்ததிலிருந்தே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்று சிறுபான்மை தமிழர்கள் வலியுறுத்திவருகின்றனர்.

இந்நிலையில் ஐக்கிய தேசிய கட்சியன் சிறப்பு மாநாட்டில் முதல முறையாக தேர்தலையொட்டி விகிரமசிங்க கொள்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த மாநாட்டில் ஜனநாயகம், நல்லாட்சி தொடர விரிவான அரசியல் முன்னணியாக இணைந்து செயற

படுவது அவசியம் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

# தேசியப் பட்டியலில் கருணா?



(கொழும்பு)

கருணாவை தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சம்மதித்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்ஷன யாப்பாவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவும் இதற்கான சம்மதத்தை வழங்கினர் என கருணா தெரிவித்தார்.

விநாயகமூர்த்தி முரளிதரன் என்ற இயற்பெயர் கொண்ட கருணா விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதியாக இருந்தவர். கருணா அம்மான் என அழைக்கப்பட்ட இவர் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை நடைமுறையில் இருந்தபோது அரசாங்கத்தின் பக்கம் சார்ந்தார். இறுதிப் போரின போது விடுதலைப் புலிகளின் அழிவுக்கு இவர் கொடுத்த பல தகவல்களே காரணமாக இருந்தன. இதற்கு நன்றிக்கடனாகவே மகிந்த ராஜபக்ஷ கடந்த இரண்டு தடவைகள் அவரை தேசியப்பட்டியல் மூலம் எம்.பியாக்கினார் எனக் கூறப்படுகின்றது. இம்முறை அவர் மீண்டும் தேசியப்பட்டியல் மூலம் எம்.பியாக நியமிக்கப்படவுள்ளார்.

# விக்கியுடன் பிஷ்வால்





(கொழும்பு)

அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர நிஷா பிஷவாலை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால், முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு கடுமையான அறிவுரை வழங்கப்பட்டதாக அறியவந்துள்ளது என்றும் கொழும்பு ஆங்கில வாரஇதழ் குறிப்பிட்டுளளது.

குறிப்பாக, இனப்படுகொலை என்ற சொல்லாட்சி விடயத்தை மேன்மைப்படுத்துமாறும், நல்லிணக்கம் மற்றும் வடக்கு மாகாண அபிவிருத்தி விடயங்களில் மத்திய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுமாறும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால், அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன – ரணில விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும், நல்லிணக்கம், மீள்கட்டுமானம், புனர்வாழ்வு விடயங்களில் அந்த வாய்பபைப் ப்யன்படுத்திக் கொள்ளுமாறும், நிஷா பிஷவால் எடுத்துக கூறியதாகவும் கொழும்பு ஆங்கில வாரஇதழ் குறிப்பிட்டுள்ளது.

# குருநாகலில் பலப்பரீட்சை



VS



(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் ஐகிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் குருநாகல மாவட்டத்தில் போட்டியிடும் மகிநத ராஜபக்ஷவுக்கு கடும் போட்டியைக் கொடுக்கும் வகையில், சரத் பொனசேகாவை அங்கு களமிறக்க நலலாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ஏற்கனவே கொழும்பு மாவட்டத்தில் தனது ஜனநாயக கட்சி சார்பில் தனித்துப் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார்.

ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மகிந்த ராஜபக்ஷவின் ஆதிக்கம் அதிகரித்து, அவர் குருநாகலில் போடடியிடவுள்ள நிலையில், சரத் பொன்சேகா கொழும்பில் தனது வேட்புமனுவில் இருந்து விலகி, குருநாகலவில் ஐ.தே.க.வின் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக கூறப்படுகிறது.

நல்லாட்சி அரசாங்கத்தில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு சிறப்பு பதவி ஒன்றை அளிக்கவும் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, குருநாகலில் உள்ள கிறீன்பீல்ட் விடுதியில் தனது கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய சரத் பொனசேகா, தாம் வடமேல் மர்காணத்தில் இருந்தே அரசியலை ஆரமபித்ததாக தெரிவித்துள்ளார்.

“சிறையில் இருந்து விடுதலையான பின்னர், மேல் மாகாணத்தில் இருந்தே அரசியலை ஆரம்பித்தேன். உள்நாட்டு அரசியலில் குருநாகல் மாவட்டம் மிக முக்கியமான இடமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இங்கு பெரியளவு வாக்கு வங்கி உள்ளது. இந்த தேர்தலில் குருநாகல மாவட்டத்தில் வெற்றிலை தோற்கடிக்கப் படும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குருநாகல மாவட்டம் அதிக வாக்காளர்களைக் கொண்ட மூன்றாவது மாவட்டமாகும்.

இங்கு அதிகளவில் படையினரும், ஓய்வுபெற்ற படையினரும், போரில் இறந்த படையினரின் குடும்பங்களும் வாக்காளர்களாக உள்ளனர்.

சரத் பொன்சேகா களமிறங்கினால், போர் வெற்றியை மையபபடுத்திய பரப்புரைகளின் மூலம, குருநாகலவில் மகிந்த ராஜபக்ஷ பெறக் கூடிய வாக்குகள் கணிசமாக குறையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

# பொறுப்பு எஸ்.பி.யிடம்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான சகல நெறியாள்கைப் பணிகளும் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்காவின் பொறுப்பில் விடப்பட்டுள்ளதாக உட்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

# ரங்காவுக்கு கதவடைப்பு அடுத்தது என்ன?



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறிரங்காவிற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் கதவை மூடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் ஐகிய தேசியக் கட்சியின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போடடியிட்ட ரங்கா பின்னர் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டார்.

இம்முறை சிறிரங்காவிற்கு, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகிய இரண்டு கட்சிகளுமே வேட்பு மனுக்களை வழஙக மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் ஐந்து தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட உள்ளனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றது.

இந்த வகையில் அந்தக் கட்சியின் சார்பில் ஆறுமுகன் தொணடமான், முத்து சிவலிங்கம் மற்றும் அனுசா சிவராஜா ஆகியோர் போட்டியிடுகின்றனர். அத்துடன் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் சதாசிவம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுகின்றார்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கமான ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் நுவரெலியா மாவட்ட இணைப்புச் செயலாளர் பெரியசாமி பிரதீபனும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுகின்றார்.

நுவரெலியா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நேரடித் தமிழ் பிரதிநிதியாக பிரதீபன் போட்டியிடவுள்ளார். நேற்றுமுன்தினம் மாலை மஹாவலி கேந்திர நிலையத்தில் பிரதீபன் வேட்புமனுவில் கையொப்பமிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

ரங்காவிற்கு எதிரான சில குறறச்சாட்டுக்கள் காரணமாகவும், சுதந்திரக் கட்சியில் தமிழ் வேட்பாளர் ஒருவரை உள்வாங்க வேண்டும் என்ற காரணத்தினாலும் பெரியசாமி பிரதீபனுக்கு இவ்வாறு சந்தர்ப்பம் அளிக்கப் பட்டுள்ளது.

எனினும் எதிர்வரும் தேர்தலில் அரசியல் கட்சியொன்றை பிரதிநிதித்துவம் செய்து நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவதா அல்லது வேறு ஓர் மாவட்டத்தில் போட்டியிடுவதா, சுயாதீனமாக போட்டியிடுவதா என்பது குறித்து சிறிரங்கா தனது நிலைப்பாட்டை இதுவரையில் ஊடகங்களுக்கு அறிவிக்கவில்லை.

# விடை பெறுகிறார் அமுனுகம

முன்னாள் அமைச்சரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சரத் அமுனுகம அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதற்கு தீர்மானித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சரத் அமுனுகம ஐ.தே.க.வில் போட்டியிடக்கூடும் என்கிற எதிர் பார்ப்பு வலுப்பெற்றிருக்கும் நிலையில், அரசியலில் இருந்து ஓய்வு பெறும் முடிவில் அவர் உறுதியாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# அங்கேயும் பிளவு

(கொழும்பு)

பொதுபலசேனா அமைப்பில் பாரிய பிளவு நிலை ஏற்பட்டுள்ள நிலையில், கட்சியின் சில சிரேஷ்ட உறுப்பினர்கள் அமைப்பில் இருந்து விலகியுள்ளனர்.

கம்பஹாவில் அமைப்பின் சார்பில் வேட்புமனுவை பெற்றிருந்த விஜித ரோஹன பொதுபலசேனா அமைப்பில் இருந்து விலகியுள்ளார்.

எனினும் காரணங்களை வெளியிடவில்லை. இந்தநிலையில் இன்று இந்த அமைப்பு தமது வேட்புமனுக்களை தாக்கல் செய்கின்றது.

இதில் பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரர் களுத்துறையில் போட்டியிடவுள்ளார்.

# உதயநிலா சனசமூக நிலையப் புனரமைப்பு எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை



## முதன்மை வேட்பாளர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொம்மை வெளி உதயநிலா சனசமூக நிலையத்தை புதுப்பொலிவுடன் மீளப்புனரமைப்பதற்கு எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பொம்மைவெளிப்பகுதிக்கு நேற்று விஜயம் மேற் கொண்ட செயலாளர் நாயகம் மக்களிடம் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

உதயநிலா சனசமூக நிலையம் நிரந்தர கட்டடமின்றிக்காணப் படும் நிலையில் அதனை உரிய முறையில் பயன்படுத்த முடியாத நிலையும் காணப்படுகின்றது.

இந் நிலையில் அதனை புதுப்பொலிவுடன் புனரமைப்பதற்கு எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப் படுமெனவும் அதற்கு மக்களின் ஒன்றிணைந்த ஆதரவு அவசியமானது என்றும் செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அப்பகுதி மக்களின் ஏனைய தேவைப்பாடுகள் பிரச்சினைகள் தொடர்பிலும் டக்ளஸ் தேவானந்தா கேட்டறிந்து கொண்டார்.

# இலவச WIFI

(வலிகாமம்)

வலி.மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட இரு பொதுநூலகங்களிற்கு இலவச வைபை (WIFI) இணைப்பு வழங்கப்படவுள்ளது.

வலி.மேற்கு உதவி பிரதேச செயலர் திருமதி கி.செந்தூரன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்புரையின் பேரில் விரைவில் சங்கானை பொது நூலகம், சுழிபுரம் பொதுநூலகம் ஆகியவற்றிற்கே இலவச வைபை இணைப்பு வழங்கப்படவுள்ளது.

இதேவேளை ஏனைய அரசாங்க திணைக்களங்கள், உள்ளூராட்சி சபை ஆகியவற்றிற்கு இலவச வைபை இணைப்பு வழங்க வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (92)

# முன்பள்ளி ஆசிரியர் தொழிற்சங்கம்; "ஆறுதல்" நிறுவனம் முயற்சி

மாவட்ட மாகாண மட்டத்தில் முன்பள்ளி ஆசிரியர்களை ஒன்றிணைத்து முன்பள்ளி ஆசிரியர் தொழிற் சங்கம் உருவாக்குவதற்கான முயற்சியில் ஆறுதல் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும் அவர்களின் பிரச்சினைகளைக் கொண்டு வரும் நோக்கத்திற் காகவே இம் முயற்சி மேற்கொள் ளப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களை ஒன்றிணைத்து ஒவ்வொரு மாவட்டத்துக்குமான தொழிற் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவற்றுக்கான பதிவுகளும் மிகவிரைவாக மேற் கொள்ளப்படவுள்ளதாக ஆறுதல் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பிரச்சினைகள் ,கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான ப்லமான அமைப்புக்கள் இன்மையால் அவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறான சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கென தனியான தொழிற்சங்கங்களின் அவசியம் உணரப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியில் கட்டமைக்கப்படும் தொழிற்சங்கங்கள் இணைந்து மாகாண ரீதியில் கட்டமைக்கப்படும் தொழிற்சங்கத்தை உருவாக்கி முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமறைக்கலாமன்றத்தின் பொற்தூறல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பொன் விழா ஆண்டை முன்னிட்டு திருமறைக்கலாமன்றம் மாதந்தோறும் நடாத்தி வருகின்ற பொற்தூறல் நிகழ்ச்சித்தொடரின் இம்மாதத்துக்கான நிகழ்வு ஆடித திங்கள் பொற்தூறல் என்னும் பெயரில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள .திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறைத் தலைவர், பேராசிரியர் ஏ.என்.கிருஷ்ண வேணி கலந்து சிறப்பித்தார்..

நிகழ்சிகளாக அ.அமிர்த லோஜனன் மற்றும் அ.அமிர்த சிந்துஜன் ஆகியோரின் இசைகச சேரியும் திருமறைக் கலாமன்ற இசைநாடகப்பிரிவு வழங்கும் குசேலர் இசை நாடகமும் இடம் பெற்றன. (48)

# முன்பள்ளிகளுக்கான உதவிகள் மன்னாரில் வழங்கி வைப்பு

மன்னார் பள்ளிமுனையில் உள்ள புனித லூசியர் ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள, முன்பள்ளி ஆசிரியர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள், 30 முன்பள்ளிகளுக்கான முதலுதவிப் பெட்டிகள் என்பவற்றை வழங்கி வைத்தார் வைத்திய கலாநிதி சி.சிவமோகன்.

மேற்படி நிகழ்விற்கு பள்ளிமுனை பிரதேச பங்குத்தந்தை ஸ்ரீபன்ராஜ் முன்னாள் நகரசபை உறுப்பினர்களான குமரேஸ் மெரீனஸ் ஆகியோரும் கலந்து கொண்டதுடன் நிகழ்வில் கலந்து கொண்ட பங்குத்தந்தை கருத்து தெரிவிக்கையில் பாடசாலைக் காலத்தில் வைத்திய கலாநிதி சி.சிவமோகனுடன் தான் ஒன்றாக படித்திருந்த விடயங்களை மீட்டிருந்தார்.

வைத்திய கலாநிதி சி.சிவமோகன் கருத்து தெரிவிக்கையில் தான் முன்பள்ளி ஆசிரியர்களின் விடயங்களை முன்நிறுத்தி செயற்படுவதாகவும் தெரிவித்தார். (40)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் கலை இலக்கியப்போட்டி முடிவுகள்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட பிரதேச மற்றும் மாவட்ட மட்ட கலை இலக்கியப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விபரம் வருமாறு

திறந்த பிரிவு - பாடல் ஆக்கப் போட்டி

பாலசுந்தரம் கலாதேவி (சண்டிலிப்பாய்),இ.இராசயோகன் (ஆனைக்கோட்டை), சுவேந்திர ராஜா காசிராஜா (சண்டிலிப்பாய்).

நாட்டார் கலை கற்றல்

இ.இராசயோகன் (ஆனைக் கோட்டை), பாலசுந்தரம் கலா தேவி, சுவேந்திரராஜா காசிராஜா (சண்டிலிப்பாய்).

விபரணப் போட்டி

பாலசுந்தரம் கலாதேவி (சண்டிலிப்பாய்), கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம் (பண்டத்தரிப்பு)

சிறுகதைப் போட்டி

வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு (நுணசை வீதி, மாதகல்)

கவிதைப்போட்டி

யாழினி யோகேஸ்வரன் (கலைவாணி வீதி, வடலியடைப்பு), சுவேந்திரராஜா காசிராஜா (மாசியப்பிட்டி வடக்கு, சண்டிலிப்பாய்),பாலசுந்தரம் கலாதேவி (சண்டிலிப்பாய் மேற்கு)

சிறுவர்கதைப்போட்டி

இ.இராசயோகன் (சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை) சுவேந்திரராஜா காசிராஜா (மாசியப்பிட்டி வடக்கு, சண்டிலிப்பாய்),வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு (நுணசை வீதி, மாதகல்)

# யாழ்.இந்துவின் முத்தமிழ்மாலை



யாழ். இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டை முன்னிட்டு கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முத்தமிழ்மாலை நிகழ்வு நேற்று முன் தினம் புதிதாக அமைக்கப்பட்ட சபாலிங்கம் கலையரங்கில் இடம் பெற்றது.

முற்று முழுதாக உள்ளூர் கலைஞர்களினை கொண்டு நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் கோபிதாசின் நெறியாள்கையில் நர்த்தன ஷேத்திராவின் நிருத்தய அர்ப்பணம், ஜோன் கலிஸ்ரனின் ஒரு கூத்தனின் குறிப்பேடு எனும் தனிநடிப்பு ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றதுடன்,வர்ணம்,சூரன்போர்,மாயவன் அவதாரம்,மயில் நடனம் ஆகிய நடனங்கள் நடைபெற்றன. (48)

## முரசின் இன்றைய பலன்

13.07.2015 திங்கட்கிழமை

மன்மத வருஷம் ஆனி மாதம் 28 ஆம் திகதி.

துவாதசி திதி / அமிர்த யோகம்

ரோகிணி நட்சத்திரம் பிற்பகல் - 2.28 வரை பின் மிருகசீரிடம்

இராகுகாலம் 7.29 - 8.59 வரை சுப நேரம் 11.59 - 1.29 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
விவாகத்திற்கு நாள் குறித்த தினத்தில் அமங்கல செய்தி வரல்

**ரிஷபம்**
திருமண நிமித்தம் சைவ போஜனத்திற்கு மாறிக் கொள்ள விருப்பம் தெரிவித்தல்

**மிதுனம்**
விளம்பரத்தை நம்பி மோசடி தக்க வைக்கும் நிலையில் மனைவி காப்பாற்றி விடல்

**கடகம்**
நீண்ட காலத்திற்குப் பின்னர் சொந்த மண்ணில் தடம் பதிப்பதில் ஆனந்தக் கூத்தாடல்

**சிம்மம்**
சுயமாக முழுவெடுத்துச் செயற்பட்டதால் காரிய ஜெயம் ஏற்படல்

**கன்னி**
பிள்ளைகளின் ஒவ்வாத நடவழக்கைகள் பவ்வியமான முறையில்கண்டிக்க முயலுங்கள்

**துலாம்**
நிலுவைகள் பெற தொலைபேசியினைப் பயன்படுத்தியமை நன்மை கிட்டுதல்

**விருச்சிகம்**
கொடுக்கல் வாங்கல் சுமுகமான நிலையில் இருந்து வரும்


**தனுசு**
மன அமைதிக்காக ஆத்மீக தெய்வ வணக்க கைங்கரியங்களில் மனதைச் செலுத்துதல்

**மகரம்**
பதவி உயர்வுடன் புதிய பொறுப்புக்களுக்கு சுமத்தப்படல்

**கும்பம்**
பூர்வீக சொத்துப்பிரச்சினை தீர்க்கப்படாது இழுபடல்

**மீனம்**
செயற்கை முறையில் புத்திரப் பேற்றுக்காக தமிழ்நாடு வைத்தியமனை செல்ல திட்டமிடல்

# உன் பயணம்; தொடும் சிகரம்



(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் முகுருஜாவை வீழ்த்தி செரீனா வில்லியம்ஸ் ஆறாவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் போட்டிகளில் மிக உயரியதும், மதிப்பு மிக்கதுமான விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி லண்டனில் நேற்று நிறைவடைந்தது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் முதல் நிலை வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்சும், 20ஆம் நிலை இளம் நட்சத்திரம் ஸ்பெயினின் கார்பின் முகுருஜாவும் மோதினர்.

முதல்முறையாக கிராண்ட்ஸ்லாம் இறுதிச்சுற்றில் அடியெடுத்து வைத்திருந்த முகுருஜா முதல் செட்டில் ஓரளவு செரீனாவுக்கு குடைச்சல் கொடுத்தார். இருப்பினும் அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய செரீனா எல்லா சவால்களையும் முறியடித்து வெற்றிபெற்றார்.

2 மணி 3 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸ் 6-4, 6-4 என்ற நேர் செட்டில் முகுருஜாவை வீழ்த்தி விம்பிள்டன் பட்டத்தை 6ஆவது முறையாக புசித்தார். மொத்தத்தில் இது அவரது 21ஆவது கிராண்ட்ஸ்லாம் மகுடம் ஆகும்.

இதன் மூலம் ஓப்பன் எரா வரலாற்றில் (அமெச்சூர் வீரர், வீராங்கனைகளுடன் தொழில் முறை வீரர்களும் அனுமதிக்கப்பட்ட 1968ஆம் ஆண்டில் இருந்து) அதிக வயதில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவர் என்ற பெருமையை செரீனா தட்டிச் சென்றார். செரீனாவுக்கு இப்போது வயது 33 ஆண்டு 289 நாட்கள். இதற்கு முன்பு இச்சிறப்பை தக்க வைத்திருந்த அமெரிக்காவின் நவரத்திலோவா 1990ஆம் ஆண்டு விம்பிள்டனை வசப்படுத்திய போது அவருடைய வயது 33 ஆண்டு 263 நாட்களாக இருந்தது.

செரீனா 2002-2003ஆம் ஆண்டில் தொடர்ந்து 4 கிராண்ட்ஸ்லாம் பட்டத்தையும் வென்றிருந்தார். அதன் பின் இப்போது அதே செரீனா ஸ்லாம் என்ற நிலையை அடைந்துள்ளார். அதாவது 2014ஆம் ஆண்டு கடைசியில் அமெரிக்க ஓப்பனை வென்றிருந்த செரீனா அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டில் அவுஸ்ரேலிய ஓப்பன், பிரெஞ்ச் ஓப்பன், விம்பிள்டன் மூன்றையும் தொடர்ச்சியாக வென்று பிரமிக்க வைத்துள்ளார்.

வெற்றிக்கு பிறகு செரீனா கூறுகையில், கார்பின் முகுருஜா சிறப்பாக விளையாடினார். கடைசி வரை அவர் கடும் போட்டி அளித்ததால், ஆட்டம் முடிவுக்கு வந்தது கூட உடனடியாக எனக்கு தெரியவில்லை. மிக விரைவில் அவர் இந்தப் பட்டம் வெல்வார். மீண்டும் ஒரு முறை செரீனா ஸ்லாம் அந்தஸ்துடன் இங்கு நிற்பதை என்னால் நம்ப முடியவில்லை. வியப்புக்குரிய இந்த இடத்தில் பல ஆண்டுகளாக விளையாடுவதும் வெற்றி பெறுவதும், மிகவும் மகிழ்ச்சியும், கௌரவமும் அளிக்கிறது என்றார்.

வாகை சூடிய செரீனாவுக்கு 1 கோடி ரூபாவும், 2ஆவது இடம் பிடித்த முகுருஜாவுக்கு 9 கோடி ரூபாவும் பரிசுத்தொகையாக கிடைத்தன.

செரீனா வில்லியம்ஸ் இதுவரை 21 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை சொந்தமாக்கியுள்ளார் அவர் வென்றுள்ள கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் விவரம் வருமாறு:

**அவுஸ்ரேலிய ஓப்பன் - 6 (2003, 2005, 2007, 2009, 2010, 2015)**

**பிரெஞ்ச் ஓப்பன் - 3 (2002, 2013, 2015)**

**விம்பிள்டன் - 6 (2002, 2003, 2009, 2010, 2012, 2015)**

**அமெரிக்க ஓப்பன் - 6 (1999, 2002, 2008, 2012, 2013, 2014)**

இதேவேளை, பெண்கள் ஒற்றையரில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர்களின் பட்டியலில் 3ஆவது இடத்தில் உள்ள செரீனா வில்லியம்ஸ், ஜேர்மனி ஜாம்பவான் ஸ்டெபி கிராப்பை நெருங்கிவிட்டார். அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர்கள் விவரம் வருமாறு:



**மார்கரெட் கோர்ட் (அவுஸ்ரேலியா) - 24**

**ஸ்டெபி கிராப் (ஜேர்மனி) - 22**

**செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) - 21**

**ஹெலன் வில்ஸ் மூடி (அமெரிக்கா) - 19**

# முதல் டெஸ்டில் அவுஸ்ரேலியா படுதோல்வி



(லண்டன்)

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஆஷஸ் டெஸ்டில் அவுஸ்ரேலிய அணி 169 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

இங்கிலாந்து - அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணிகள் இடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் கார்டிப்பில் கடந்த 8ஆம் திகதி தொடங்கியது. முதல் இனிங்ஸில் முறையே இங்கிலாந்து 430 ஓட்டங்களும், அவுஸ்ரேலியா 308 ஓட்டங்களும் எடுத்தன. 122 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இனிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி 3ஆவது நாள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றது.

இதன் மூலம் அவுஸ்ரேலியாவுக்கு 412 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆஷஸ் டெஸ்ட் வரலாற்றில் இவ்வளவு பெரிய ஓட்ட எண்ணிக்கையை இதுவரை எந்த அணியும் துரத்தி வென்றதில்லை.

இந்த நிலையில் இமாலய இலக்கை நோக்கி 4ஆவது நாளான நேற்று முன்தினம் அவுஸ்ரேலிய அணி 2ஆவது இனிங்ஸை ஆரம்பித்தது. இதில் ரோஜர்ஸ் விரைவாக ஆட்டமிழந்த போதிலும், டேவிட் வோர்னர் மற்றும் ஸ்மித் ஆகியோர் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இந்த ஜோடி மொயின் அலியின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் பிரிக்கப்பட ஏனைய அவுஸ்ரேலிய அணியின் விக்கெட்டுக்கள் சீட்டுக் கட்டுப் போல சரிந்தன. இறுதியில் அவுஸ்ரேலிய அணி 2ஆவது இனிங்ஸிற்காக 70.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் 169 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி பெரு வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் டேவிட் வோர்னர் 52, ஸ்ரீபன் ஸ்மித் 33, வட்சன் 19, ஜோன்சன் 77 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொயின் அலி, ஸ்ரூவொர்ட் புரொட் ஆகியோர் தலா மூன்று, ஜோ ரூட், மார்க் வுட் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஜோ ரூட் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. 2ஆவது டெஸ்ட் போட்டி எதிர் வரும் 16ஆம் திகதி லண்டன் லோர்ட்சில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சானியாவின் முதல் மகுடம்



(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா-சுவிஸின் மார்ட்டினா ங்கிஸ் ஜோடி சம்பியன் பட்டம் வென்றுள்ளது. சானியா மிர்சா விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனை படைத்துள்ளார். பெண்கள் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இந்தியாவின் சானியா மிர்சா - சுவிஸின் மார்ட்டினா ங்கிஸ் ஜோடி, ரஷ்யாவின் மகரோவா-எலினா வெஸ்னினா இணையை சந்தித்தது. .இதில் இந்தியாவின் சானியா மிர்சா - சுவிஸின் மார்ட்டினா ங்கிஸ் ஜோடி 5-7, 7-6(7-4) 7--5 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று பட்டத்தை வென்றது.

சானியா மிர்சா விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் முதல் முறையாக பட்டம் வென்று இரட்டையரில் விம்பிள்டன் பட்டம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சிறப்பைத் தனதாக்கிக்கொண்டார்.

விம்பிள்டன் போட்டியில் சாதனை படைத்த இந்திய வீராங்கனை சானியா மிர்சாவிற்கு பாராட்டுக்கள் குவிந்து வருகிறது. டுவிட்டர், பேஸ்புக் என சமூக வலைத்தளங்களில் நட்சத்திரங்கள் மற்றும் இரசிகர்கள் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர். பட்டம் வென்றுள்ள சானியா மிர்சா செய்தியாளரிடம் பேசுகையில், இதுவரையில் விளையாடி போட்டிகளிலே இதுமிகவும் சிறந்தது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

# பின்புற உதையாக எடுத்துக்கொள்வோம்

ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்வியை பின்புறத்தில் கொடுக்கப்பட்ட உதையாக எடுத்துக்கொள்ள வேண்டும் என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் நடைபெற்று முடிந்த உலக கோப்பை லீக் போட்டியில் நியூசிலாந்து அணியிடம் தோற்றதற்கு ஒப்பானது இந்தத் தோல்வி. அந்த தோல்வியைப் பின்புறத்தில் கொடுக்கப்பட்ட உதையாக எடுத்துக்கொண்டோம். இதையும் அது போல் எடுத்துக்கொண்டுள்ளோம்.

நிச்சயமாக இங்கிலாந்தை நாங்கள் எளிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அவர்களுக்குச் சாதகமான சூழ்நிலையில் விளையாடுவதால் அந்த அணியைத் தோற்



கடிப்பது கடினம் என்று தெரியும். இந்தத் தோல்வி அதை உறுதிப்படுத்தியுள்ளது. நாங்கள் கவனமாகவும் கட்டுப்பாட்டுடனும் விளையாட வேண்டியது அவசியம். மேலும் ஒவ்வொரு போட்டியிலும் இரண்டு அல்லது மூன்று பேர் பெரிய அளவில் ஓட்டங்கள் குவிக்க வேண்டியதும் அவசியம் எனத் தெரிவித்தார்.

# ஹிட்டாகிய பெக்காமின் பிடியெடுப்பு



இங்கிலாந்து கால்பந்து அணியின் முன்னாள் கப்டன் டேவிட் பெக்காம் விம்பிள்டன் அரையிறுதிப் போட்டியில் பிடித்த பிடி இங்கிலாந்திலும் இணையத்திலும் வைரல் ஹிட்டாகியுள்ளது.

இங்கிலாந்தின் ஜெமி முர்ரே, அவுஸ்ரேலியாவின் ஜோன் பியர்ஸ் ஜோடியுடன் ஜொனாதன் ஏர்லிச் மற்றும் பிலிப் பெட்சனர் ஜோடி மோதிய விம்பிள்டன் ஆடவர் இரட்டையர் பிரிவுப் போட்டியில் 40 வயதான பெக்காம் பார்வையாளராக கலந்து கொண்டார். அப்போது திடீரென வீரர் ஒருவர் வீசிய சேர்வீஸ் பந்து, மைதானத்தின் தடுப்பு சுவர் மீது பட்டு எம்பி, ரோயல் பாக்சில் இருந்து போட்டியை பார்த்துக் கொண்டிருந்த டேவிட்டை நோக்கி விரைந்தது.

பாய்ந்து வந்த ரென்னிஸ் பந்தை லாவகமாக பிடித்த டேவிட் பெக்காம், பிடித்த உடனேயே அதை ரென்னிஸ் மைதானத்தை நோக்கி வீசினார். இதற்குள் அரங்கமே டேவிட்டின் பிடியை கை தட்டி கொண்டாடத் தொடங்கியது. இவ்வளவு ஏன்? போட்டியில் இங்கிலாந்தின் ஜெமி முர்ரே ஜோடி வெற்றி பெற்றாலும், போட்டி முடிந்து கலைந்த கூட்டம் முழுவதும் டேவிட்டின் பிடியைப் பற்றித்தான் பேசிக் கொண்டது என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.....

# இலங்கை அணியில் இடம்பிடிப்பதே இலக்கு

## தேசிய கால்பந்தாட்ட அணியின் 14 வயதுப் பிரிவு வீரர் கஜானன்



இலங்கை அணிக்காக விளையாடுவதே எனது இலட்சியம் என தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் வீரரும் தேசிய கால்பந்தாட்ட அணியின் 14 வயதுப் பிரிவு அணி வீரருமான ஞானேஸ்வரன் கஜானன் தெரிவித்துள்ளார்.

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட 14 வயதுப் பிரிவு தேசிய அணியில் இடம்பிடித்து இந்தியா, பாகிஸ்தான், தஜகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுடனான போட்டிகளில் பங்குபற்றி தாயகம் திரும்பியுள்ள தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வீரர் ஞானேஸ்வரன் கஜானன் தனது வெளிநாட்டு அனுபவங்கள் குறித்து எமது செய்தியாளர் தயாளபாலனுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எனது சகோதரன் மதுசன் தட்டெறிதல் போட்டியில் மாகாண மட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றமையே எனக்கு விளையாட்டுத்துறையில் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியது.

அத்துடன் எனது பேரனார் செ. இராஜரட்ணம் மகாஜனக் கல்லூரியின் புகழ் பூத்த கால்பந்தாட்ட வீரர் என்பதை எமது மாமனார் கூறக்கேள்விப்பட்டிருக்கின்றேன். அந்த வகையில் அவரைப் போன்று கால்பந்தாட்டப் போட்டியில் மிளிர வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. இவற்றோடு எனக்கு கால்பந்தாட்டத்தில் இருக்கும் ஆர்வத்தை அவதானித்த க. மயில்வாகனம் ஆசிரியர் எனக்குள் இருந்த கால்பந்து ஆர்வத்தை வெளிக்கொணர பெரும் பங்காற்றினார்.

இவ்வாறான எனது கால்பந்து திறனை நான் வளர்த்து பல போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்டிருந்தேன். அந்த வேளை குறிப்பாக, கடந்த 2014ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் கீழ் மாணவர்களிற்கான இலங்கை கால்பந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்யும் நிகழ்ச்சி கொழும்பு இராஜகிரியவில் இடம்பெற்றது.

இத்தெரிவுக்காக எமது கல்லூரியிலிருந்து நானும் எனது நண்பன் அபிசரன், சானு,சிலக்சிகா, கலன்ஜா, கௌரி, தர்மினி போன்றோர் சென்றோம். எமது பயிற்றுவிப்பாளர் சாந்தகுமார், பழைய மாணவன் சத்தியராஜ் எமக்கு வழிகாட்டிகளாக விளங்கினர்.

தெரிவுப் போட்டிகள் பதினைந்துக்கும் மேற்பட்டதாக இருந்தது. போட்டிகளில் தொடர்ந்து விளையாடினோம். இறுதியில் என்னுடன் சானு, சிலக்சிகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். எனக்கு அந்தத் தருணம் மகிழ்ச்சியாக இருந்தது.

இந்த ஆண்டு இலங்கையின் அமைப்பினால் 14 வயதிற்குட்பட்ட கால்பந்தாட்ட அணிக்கான தெரிவு இடம்பெற்றது. இத்தெரிவிற்காக எனது தந்தையார் அழைத்துச் சென்றார்.

இத்தெரிவில் 700 போட்டியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். பிறிதொரு நாளில் 300 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அந்த 300 பேரில் இருந்து 60 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அந்த 60 பேரில் எனது பெயரையும் அறிவிக்கும்போது மகிழ்சியாக இருந்தது.

60 பேரிலிருந்து 28 வீரர்கள் பின்னர் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்து 18 பேர் கொண்ட இலங்கை தேசிய அணியில் நானும் சென்.ஜோண்ஸ் கல்லூரி வீரர் கிறிஸ்ரி அன்ரன் ஜெனுசனும் தெரிவு செய்யப்பட்டு தஜகிஸ்தான் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். எமது அணிக்கு கொழும்பு சென். பீற்றர் கல்லூரியின் வீரர் முகமட் சபீர் றகுனியா செயற்பட்டார்.

தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்கு எதிரான போட்டிகளிலும் பங்குபற்றினேன்.வெளிநாட்டுப்போட்டிகளில் பங்குபற்றும்போது முதலில் பயமாக இருந்தது. முதல் போட்டியில் விளையாடும் போது கஷ்டமாக இருந்தது. எனினும் எமது வீரர்கள் சுறுசுறுப்பாக விளையாட வேண்டும், வெற்றியை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற வெறியுடன் செயற்பட்டேன்.

வெளிநாடுகளுடனான போட்டிகளில் பல புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொண்டேன். தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்பட்டு ஒவ்வொரு வயதுப் பிரிவு தேசிய அணியிலும் இடம்பிடித்து

நான் தேசிய அணியில் இடம்பிடிப்பதற்கு பலர் ஒத்துழைப்பு வழங்கினர். குறிப்பாக, எமது கல்லூரிச் சமூகம், அதிபர் மணிசேகரம், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், விளையாட்டுத்துறை முதல்வர் உமாசுதன், பயிற்றுவிப்பாளர் சி. சாந்தகுமார், மோகனதாஸ், மற்றும் மயில்வாகனம், திலீபன், சுபாஸ்கரன், இராஜராஜன், புனித தயாபரன் மற்றும் வழிகாட்டிய ஆசிரியை ஜெயந்தி மற்றும் லண்டன் பழைய மாணவன் செல்வஸ்தான், . சத்தியராஜ் போன்றோருக்கு இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எதிர்காலத்தில் இலங்கை அணிக்காக விளையாட வேண்டும். அதன் மூலம் எமது கல்லூரிக்கும் மாகாணத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்ற பெரு இலட்சியம் உள்ளது. அத்துடன் சிறந்த தொழில் ஒன்றில் இருந்து என் போன்ற வீரர்களுக்கு உதவ வேண்டும் என்பதே எனது எதிர்கால விருப்பாக உள்ளது எனத் தெரிவித்தார். (93)

---

## விளையாட்டுச் செய்திகள்

## லிவர்பூல் அணியின் புதிய கப்டனாக ஹெண்டர்சன்

(லண்டன்)

பார்சிலோனே, ரியல் மட்ரிட் அணிகளைப் போன்ற மிகவும் பிரபலம் வாய்ந்த கால்பந்து கிளப் அணி லிவர்பூல். இங்கிலாந்தை மையமாக கொண்ட இந்த அணிக்கு புதிதாக ஹெண்டர்சன் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். அந்த அணியின் நீண்ட நாள் கப்டனாக (12 ஆண்டுகள்) இருந்த ஸ்ரீபன் ஜெரார்ட், லா கேலக்சி அணிக்கு சென்றதால் அந்த வாய்ப்பு ஹெண்டர்சனுக்கு கிடைத்துள்ளது.

25 வயதான ஹெண்டர்சன் அந்த அணிக்காக நடுகள வீரராக விளையாடி வருகிறார். கடந்த சீசனில் துணை கப்டனாக செயற்பட்டார்.

இந்த வாய்ப்பு குறித்து ஹெண்டர்சன் கூறுகையில் இந்த வாய்ப்பால் மிகுந்த மிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இது ஒரு மிகப்பெரிய மரியாதை. புகழ்பெற்ற கால்பந்து அணி என்னுடைய பெயரை கப்டனாக தேர்ந்தெடுத்தது எனக்கு கிடைத்த பாக்கியம்.

கடந்த சீசனில் ஸ்ரீபன் விளையாடாத நேரத்தில், கப்டன் பேண்ட்–ஐ வாங்கும்போது சிறந்த விளையாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்று கடுமையாக முயற்சி செய்தேன். தற்போதும் அதே கடும் முயற்சியுடன் செயற்படுவேன் என்றார்.

## தோல்வி; மத்தியூஸ் விளக்கம்

(தம்புள்ள)

நாங்கள் போதுமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ளவில்லை. இதுவே தோல்விக்கான அடிப்படைக் காரணம். அடுத்து வரும் போட்டிகளில் இது போன்ற தவறுகளை செய்யமாட்டோம். பாகிஸ்தான் அணி தனக்கான சந்தர்ப்பங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டதன் காரணமாக இலகுவாக வெற்றிபெற முடிந்தது என நேற்று முன்தினம் தப்புள்ளவில் நடைபெற்ற போட்டி குறித்து இலங்கை அணி கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

## மைதானம் திறப்பு

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபையின் விளையாட்டு மைதானம் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சபையின் தவிசாளர் ப. வசந்தகுமார் சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டி மைதானத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதேச சபையின் உத்தியோகஸ்தர்கள், பணியாளர்கள், உறுப்பினர்கள், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

திறப்பு விழாவையொட்டி காட்சிப் போட்டியாக பொற்பதி விளையாட்டுக் கழக அணிக்கும் பிரதேச சபை அணிக்கும் இடையே துடுப்பாட்டப் போட்டியும் பொற்பதி விளையாட்டுக் கழகத்துக்கும் சென். மைக்கல் அணிக்குமிடையிலான கால்பந்துப் போட்டியும் இடம்பெற்றது.

கிரிக்கெட் போட்டியில் 29 ஓட்டங்களால் பொற்பதி அணி வெற்றிபெற்றது. கால்பந்தாட்டப் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. இப்போட்டியில் பங்குபற்றிய சகல அணிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

தவிசாளர் ப. வசந்தகுமார், முன்னாள் செயலாளர் மேரி யோசெப் காந்தசீலன், சபை உறுப்பினர்கள் க. தர்மரத்தினம், சி. கஜேந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

யாழ். மாவட்ட விளையாட்டுப் பயிற்சியாளர் கா. சுதாகரன் மற்றும் கால்பந்தாட்ட பயிற்சியாளர் தர்மகுலசிங்கம் (வெள்ளை) ஆகியோர் சபையினரால் கௌரவிக்கப்பட்டனர். (137)

# இயலரசன் மீண்டும் அசத்தல் பந்துவீச்சு யாழ். மத்திக்கு இரண்டாவது வெற்றி


(யாழ்ப்பாணம்)

இயலரசனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 32 ஓட்டங்களால் அபாரமான வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் யாழ். மத்திய கல்லூரி மற்றும் அனுராதபுரம் வரிசிங்க ஹரிசந்திரா மகாவித்தியாலய அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி கடந்த 3ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி பண்டார, ராதுநாயக ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விக்கெட்டுக்களை மளமளவென பறிகொடுத்தது. இருந்தபோதிலும் நிரோஜன் ஒரு முனையில் பொறுமையாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 32.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோஜன் ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 35, ஜெயதர்சன் 17, நிதுசன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பண்டார, ராதுநாயக்க ஆகியோர் தலா மூன்று, ஏ. பண்டார இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 107 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அனுராதபுரம் வரிசிங்க ஹரிசந்திரா மகாவித்தியாலய அணி இயலரசனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் வேகமாகப் பறிகொடுத்தது. இறுதியில் அனுராதபுரம் வரிசிங்க ஹரிசந்திரா மகாவித்தியாலய அணி 19 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் நவோதய 15, பண்டார 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இயலரசன் 15 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, கலக்சன் 07 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, மதுசன் 09 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 32 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. அத்துடன் இரண்டாவது சுற்றில் இரண்டாவது வெற்றியை யாழ். மத்திய அணி பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது. மற்றைய போட்டியில் கிளிநொச்சி தருமபுரம் அணியை யாழ். மத்தி வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது.



# சின்னதாய், த்ரில்லிங்காய், ஒரு புன்னகைப் புரட்சி

- வ.ஸ்ரீநிவாசன் - 1



தயாரிப்பாளர்களிலிருந்து, விமர்சகர்கள் வரை விஷயம் தெரியாதவர்களின் கையில் சிக்கிக் கொண்டு தவிப்பதும், இலுப்பைப் பூக்களே கொண்டா டப்படும் ஆலையில்லா ஊராய் தமிழ் சினிமா உலகம் இருப்பதும் இன்று நேற்றாய் நடப்பது அல்ல. உலக அரங்கு என்று வேண்டாம் அகில இந்தியாவிலும் ஒப்பிட்டுப் பார்த்தாலும் நாம் பெருமையாக சொல்லிக் கொள்கிற மாதிரி படங்கள் இங்கு அதிகம் இல்லை.

பேசாத படங்கள், பேசும் என்கிற அடைமொழியோடு பாடும் படங்கள், பேசு பேசென்று பேசிய படங்கள், புராணிகப் படங்கள், சரித்திரப் படங்கள், கத்திச் சண்டை, கத்தாமல் சண்டை போட்ட படங்கள், சமூகப் படங்கள், குடும்பப் படங்கள், காதல் படங் கள், மர்மப்படங்கள், நகைச் சுவைப் படங்கள், பிரசாரப் படங் கள் என்று வகைப்படுத்தியோ, கால கட்டங்களை வைத்தோ பார்த்தாலும் எல்லாம் கலந்த கலவையாக யதார்த்தம் என்கிற பெயரில் யதார்த்தத்துடன் சம் பந்தப்படாத படங்களே அநேகம்.

ஒரு சமயம் ஸ்ரீதர் வந்தார். சினிமாவில் செந்தமிழும், சகஜமான தமிழும் கலந்து வந்தன. அவர் காலத்திலும், பின்னருமாக கே. பாலச்சந்தர், கே.எஸ். கோபாலகிருஷ்ணன் போன்றவர்களும் நல்ல இயக்கு நர்கள் என்கிற அடை மொழி-யோடு புகழ் பெற்று இருந்தார் கள். ஸ்ரீதரின் நெஞ்சம் மறப்பதில் லையும், காதலிக்க நேரமில்லை, ஊட்டி வரை உறவு போன்ற நகைச்சுவைப் படங்களும் அவர் இடத்தைக் காப்பாற்றும் பொழுது போக்குப் படங்கள். கே.எஸ். கோபாலகிருஷ்ணனின் “என்ன தான் முடிவு” ஆன்மீகப் போராட் டத்தினை சித்தரிக்க முயன்ற முக்கிய மான தமிழ்ப் படம். பாமா விஜயம், அனுபவி ராஜா அனுபவி போன்ற நகைச்சுவைப் படங்களில் மிளிர்ந்த கே.பா. முயன்று முயன்று திரை யில் கொண்டு வரப் பார்த்த ஆற்றல் மிகு பெண் பாத்திரம் அவரது கடைசிப் படங்களில் ஒன்றான “கல்கி”யில் மட்டுமே ஓரளவு கை கூடி இருந்தது.

சினிமா பற்றிய அறிவு மிக்கவர் களாலும் (ப. நீலகண்டன், அனந்து) ஒன்றும் பிரமாதமாகச் செய்துவிட முடியவில்லை.

பின்னர் பாரதிராஜா வந்ததும், செட்டியார், ரெட்டியார், ஐயரிடம் (ஏவி.எம்., நாகிரெட்டி, எஸ்.எஸ். வாசன்) மாட்டிக் கொண்டிருந்த சினிமாவுக்கு விடுதலை என்று சில விமர்சகர்கள் சொன்னார்கள். ஆனால் பாரதிராஜா பாக்யராஜ் போன்ற உதவியாளர்களை வைத்துக் கொண்டு ஆபாசம் இல்லாமலோ, கோணல் இல்லா மலோ எடுப்பதும் கடினம். எனினும் நாடகத்துக்கும், சினிமாவுக்கும் வித்தியா சம் தெரியாத, துருத்தும் குறியீட்டுக் காட்சிகளாலும் (கே.பா.) வானொலி நாடகங்கள் போல் விஷுவல் என்கிற ஒரு விஷயம் இருப்பதையே மறந்து போன உரத்த குரல் நீட்டிமுழக்கும் வசனங்களாலும் (கே.எஸ்.ஜி.) படங்களைக் கெடுக்காதவர் என்கிற வகை யில் பாரதிராஜா பாராட்டுக் குரியவர்.

ஜெயகாந்தன், ருத்ரைய்யா போன்ற வர்களின் உயர்தர படங்களுக்கான முழு முயற்சிகள் தவிர மகேந்திரன், பாலு மஹேந்திரா - அவரது கொப்பியடிப்பது, செக்ஸின் மீதான அதீத சார்பு இரண்டை யும் நீக்கிவிட்டுப் பார்த்தால் (அப்படி எதற்காகப் பார்க்கவேண்டும்?) - படங் களில் காணப்பட்ட நல்ல காட்சிகள், பாசிலின் உயிரோட்டம் மிகுந்த இயல் பான படங்கள், தமிழின் வணிக சினி மாக்களில் நல்ல படங்கள் என்கிற வரிசை யில் முதல் ஸ்தானத்தைப் பெறுபவை.

பின்னர் வந்தவர்களில் அகில இந்தியப் புகழ் பெற்ற சில இயக்கு நர்களின் படங்கள் போலித் தன்மை மிகுந்தவையாகவே உள்ளன. நுண்புலனுணர்வு உள்ளவர்கள் இவற்றின் பாசாங்கையும், mediocrity யையும், வணிக நோக்கு உந்துதல்களையும் எடுத்த எடுப்பிலேயே உணரந்து விடுவார்கள். வேறு சில புது முயற்சிகளும் வலிந்து வன்முறை நிரம்பியவையாகவே இருந்தன. கிராமம் பற்றிய படங்கள் பலவும் ஏமாற்றம் அளிப்பவையாக இருந்தன. சில வெறுப்புறும்படியும். கிராமத்துக் கவிதை கள் எனப் புகழப்பெற்ற படங்களில், ஜெயகாந்தன் பாரதிராஜா பற்றிச் சொன்ன மாதிரி “கிராமமும் இல்லை, கவிதையும் இல்லை”. பெரிய நடிகர்களின், பெரிய இயக்குநர்களின் ஒரே மாதிரியான படங்கள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தன.

மேலே சொன்ன இந்த மாதிரி சூழலில்தான் ஒரு புரட்சி நடக்கட்டுமா என்று கேட்க ஆரம்பித்திருக்கிறது. புரட்சி என்றதும் இரத்தக் களரியால், அழிவால் வருவது என்று தோன்றும். ஆனால் கலைகளிலும், எழுத்திலும் புரட்சி, உரத்து, அடுக்கு மொழியில் பேசாமல், வானம் நிறம் மாறுவதைப் போல், துளி உராய்வில்லாமல் வந்ததை இவ்வுலகம் கண்டிருக்கிறது. அந்த மாதிரியில் தமிழ் சினிமாவிலும் ஒரு புரட்சி சமீபத்தில் சப்தமில்லாமல் நிகழத் துவங்கியுள்ளது.

நம்பிக்கையூட்டும் புதிய இயக்குநர்களுக்கு ஒன்றிரண்டு படங்கள்தான் வந்துள்ளன. அதற்குள் நாம் அவசரப் பட முடியாது. நாம் நிறைய one film wonder களைப் பார்த்திருக்கிறோம். பாரதிராஜாவின் “பதினாறு வயதினிலே” அதன் செக்ஷுவல் வல்காரிடி தவிர ஒரு புதிய திருப்பமாக அமைந்தது. பிறகு அதிகம் தேறவில்லை. ஆனால் கணிசமான படங்கள் எடுத்திருக் கிறார். ருத்ரையாவின் “அவள் அப்படித்தானும்” அப் படித்தான். அப்புறம் அவ்வளவுதான். ஆனால் இதற்குக் காரணம் அவருக்கு கிட்ட வேண்டிய அடையாளமும், ஆதரவும் கிட்டவில்லை. ஈ.எம். இப்ராஹிமின் “ஒரு தலை ராகம்”. ஓடவும் செய்தது. உருக்கவும் செய்தது. அவ்வளவு இயல்பான நடிப்பை (குறிப்பாக உஷா ராஜேந்தர், ஓரளவு சங்கர்) அந்தக் காலத்தில் பார்ப்பது அரிது. அவரது அடுத்த படம் “தணியாத தாகம்”என்கிற haunting பெயரில் வந்தது. போய்ப் பார்ப்பதற்குள் ஓடி விட்டது.

இப்போதைய நல்ல படங்களைக் குறிக்க நடிகர் (விஜய் சேதுபதி நீங்கலாக) இயக்குநர் தயாரிப்பாளர் என்று பிரித்து விசேஷமாய்ச் சொல்ல இன்னும் பல படங்கள் வர வேண்டும்.

(தொடரும்)

## காலமும் கருத்தும்




வாழ்க்கையில் எப்படியாவது சில விடயங்களை மனதைக் கட்டுப்படுத்தியாவது கடைப்பிடிக்க வேண்டும். மனிதனுக்கு எதிரி யாரென்றால் அதற்கு விடையாக வருவது

# நிற்க ஏது நேரம்?

வேறு யாருமில்லை, அது மனம் தான். எல்லாம் அது எடுத்துக்கொள்கின்ற போக்கிலே தான் இருக்கிறது. இதற்கு ஒரு சம்பவத்தை குறிப்பிடலாம்.

ஒரு முறை மாபெரும் வீரனான படைகளின் தளபதி தனது சகாக்களுடன் குதிரையிலே அயல் நாட்டின் மீது போரைத்தொடுக்க அந்நாட்டினை உளவு பார்க்கச் சென்றிருந்தான். அந்த வேளையி-லே காற்று மிகவும் பலமாக வீசியது. அப்போது அத்தளபதியினது செயற்கை தலை முடித் தொகுதி



காற்றிலே அள்ளுண்டு போனது. தளபதியினது வழுக்கைத்தலை அப்பட்டமாக தெரிந்தது. சக வீரர்கள் அதைப்பார்த்து ஏளனமாக சிரித்தார்கள், பரிகசித்தார்கள்.

ஆனால் அதனால் சற்றும் கலக்கமடையாத தள-பதி, “எனக்கு இயற்கையாக வளர்ந்திருந்த தலை முடியே என் தலையில் வளர மறுத்துவிட்டது. இந்த செயற்கை முடி எம்மாத்திரம்....” என்று அலட்சியமாக சொல்லிச் சிரித்துவிட்டு பயணிக்க ஆரம்பித்தான்.

சகவீரர்கள் வெட்கினர். அவனை அவமானப்படுத்தப்போய் தம் முகத்தில் சாணியை பூசிய கதையாக மாறிவிட்டதே என்று சிந்தித்தவாறே படைத்தளபதியை தொடர்ந்தனர்.

வாழ்க்கை இப்படித்தான் சில நேரங்களிலே எமது நடவடிக்கைகள் பிரபஞ்ச சக்தி விதியின் மாற்றத்திற்கு உட்பட்டு சற்றுத் தளம்பலடையலாம், உலகம் அதைப்பார்த்து சிரிக்கலாம், அதற்காக நாம் கலங்கிவிடக்கூடாது. அதனை தூக்கி குப்பையில் கடாசி விட்டு எமது வேலைகளைப் பார்க்கச் சென்று விட வேண்டும். இல்லையேல் உலகம், சாணி தட்டவும், சினிமா மற்றும் தேர்தல் போஸ்டர் ஒட்டும் சுவராகவும் எமது நிலை மாறிவிடும். உலகம் ரொம்ப ஜாக்கிரதை....

இதை ஏன் நான் சொல்ல வருகிறேன் என்றால் ஈழத்தமிழர்களிடம் உள்ள பிரதான நோய் முற்கற்பித நோய். ஒருவரது உருவத்தைப் பார்த்தவுடன் பயப்படுவது. ஒரு முறை ஒரு வீதியால் செல்லும் போது நாய் துரத்தினால் அந்த வீதியினால் காலகாலத்திற்கும் செல்வது கிடையாது. சில வேளைகளில் அந்நாய் செத்துக்கூடப் போயிருக்கலாம்.

இதே போல அதிகமான விடயங்களில் குறை-பாடு எம்மிடத்தே காணப்படுகின்றன. இந்த நோய் தான் எமது சமூகத்தை எழும்பவிடாமல் தடுக்கிறது. இதே விளையாட்டுத்தான் எமது அரசியல், பொருளாதாரம், சமூகம், சூழல் என அனைத்து விடயங்களிலும் காணப்படுகின்றது.

இதனோடு எமது சமூகத்தில் இருப்பவர்களுக்கு அடுத்தவரை விமர்சிப்பதென்பது ஒரு பிரதான பொழுது போக்காக இருந்தாலும், இந்த விமர்சனங்கள் சிலரை பெரிய சாதனைகளை செய்ய தூண்டியிருக்கிறது என்றாலும், ஒருவரது குறைகளை மட்டும் ஊதிப் பெரிதாக்குவதென்பது எம்மிடையே காணப்படும் கவலைப்படத்தக்க விடயமாகும்.

இப்படியான குறைபாடுகளின் மத்தியில் தான் நாம் வாழ்ந்து வருகின்றோம். மற்றவனைப் பற்றி சிந்திப்பதற்கு எவரும் இல்லாத சமூகங்களாகவே இன்று உலகம் மாறிக்கொண்டு வருகிறது. சுய நல சமூகங்கள் நிறைந்த இந்த உலகிலே வாழ்வ தென்பதே ஒரு சவாலான விடயமாக மாறிக் கொண்டு வருகிறது.

பணம், பதவி, காமம் என்பவற்றிற்காக எதனை யும் செய்யத்துணிந்த சமூகத்திலே, தேர்தல் திரு விழாவும் கொடியேற்றத்துடன் தொடங்கிவிட்டது. புழுகு அர்ச்சனைகளும், பம்மாத்து அபிஷேகங்க ளும் இடம்பெற்று, மனித ஆகுதிகளும் கொடுக்கத் தொடங்கி விட்டனர்.

இந்நிலையிலே வெற்றிக்காக மாத்திரமும், சுய வருமானத்திற்காகவும் எதையும் செய்வோம் என் றுள்ள காலகட்டத்திலே எமக்கென்னத்திற்கு மனிதா பிமானம்? என்று சமூகம் உருவாகிவிட்ட நிலை யிலே இனி என்னத்தைச் சொல்லி என்னத்தைச் செய்ய? என்னத்திற்கு வீண்பேச்சு? நிற்க ஏது நேரம்?

- அன்புவழியூர் ச.திருச்செந்தூரன்
திருகோணமலை.

# தொப்பையைக் குறைக்க...

உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்கள் என்ன செய்ய வேண்டும்? உலகத்தில் வேறு எதற்கும் இவ்வளவு ஆலோசனைகளைச் சொல்லியிருக்க மாட்டார்கள்.

எல்லாருக்கும் தெரிந்த ஆனால், தெரிந்தும் அவற்றைக் கடைப்பிடிக்காமல் தொப்பையை வளர்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு நினைவுபடுத்துவதற்காக சில குறிப்புகள்:

முதலில் உணவைக் கட்டுப்படுத்த வேண்டும்.

கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளை அதிகம் சாப்பிடக் கூடாது.

இனிப்பு, காரம், எண்ணெய்யில் பொரித்த, வறுத்த உணவுகளைச் சாப்பிடக் கூடாது.


நீர் நிறைந்த பழங்கள், நார்ச்சத்து உள்ள பழங்கள், காய்கறிகளை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பசியில்லாமல் சாப்பிடக் கூடாது.

ஒவ்வொருவரும் முடிந்த அளவுக்கு உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு நாளைக்கு சராசரியாக 45 நிமிடங்கள் முதல் 1 மணி நேரம் வரை நடக்க வேண்டும். அதற்காக ரொம்ம்... பவும் மெதுவாக நடக்கக் கூடாது. 4 - 5 கிலோ மீட்டராவது நடக்க வேண்டும்.

முக்கியமாக உடல் எடையைக் குறைப்பதாகச் சொல்லி விளம்பரப்படுத்தும் மருந்துகளைச் சாப்பிடக் கூடாது.



1980 இல் சோவியத் யூனியனின் "அன்டனோவ் டிசைன் பீரோ"வால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட விமானம் இது. உக்ரைன் மொழியில் இதன் பொருள் "கனவு".

உண்மையில் சோவியத் யூனியனின் கனவுதான். ஆனால் சோவியத் யூனியன் பிரிந்ததும் உக்ரைனிடம் ஒப்படைக்கப்பட்டது.

உலகில் புழக்கத்தில் உள்ள மிக நீளமான, மிக அதிக எடை கொண்ட விமானம் இதுதான். இதில் அதிகபட்சமாக 640 தொன் எடையைத் தூக்கிச் செல்ல முடியும்.

1988 இல் கட்டிமுடிக்கப்பட்டு அந்த ஆண்டே விண்ணில் பறந்தது.

முதன்முதலில் விண்வெளி சார்ந்த வாகனங்களை, கருவிகளை எடுத்துச் செல்ல பயன்படுத்தப்பட்டது. அடுத்து கனமான பொருட்களை எடுத்துச் செல்ல உதவியது.

2001 இல் 253 தொன் எடை கொண்ட 4 மெயின் தாங்கிகளை இது தூக்கிச் சென்றது.


எரிவாயு பவர் ப்ளாண்டுக்குத் தேவைப்பட்ட ஜெனரேட்டரை (189 தொன்) தூக்கிச் சென்றது.

42 மீட்டர் நீளம் கொண்ட இரண்டு குளிரூட்டும் காற்றாடிக்கான இறக்கைகளை எடுத்துச் சென்றது.

இதில் கூடவே பயணிக்கும் ஊழியர்களின் எண்ணிக்கை 6.

இதன் நீளம் -84 மீட்டர்

# அன்டனோவ் ஏ.என். 225



இரு இறக்கைகளின் (விரி நீளம்) - 88.4 மீட்டர்

உயரம் - 18.1 மீட்டர்

காலி எடை - 285 தொன்

ஒரு தடவை முழுமையாகப் பெட்ரோல் நிரப்பினால் 15,400 கி.மீ. இது பறக்கும்.

இதன் வேகம் மணிக்கு 763.2. கி.மீ.

# புதிதாய் பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய தோல் மஞ்சள் நிறமடைதல் (Neonatal Junudice) ஒரு மஞ்சள் எச்சரிக்கை (Yellow Alert)

Dr. ந. ஸ்ரீசரவணபவானந்தன்.
குழந்தை வைத்திய நிபுணர்.
யாழ் போதனா வைத்தியசாலை.

புதிதாய் பிறந்த குழந்தையானது, பொதுவாக இளஞ்சிவப்பு நிறமாகக் காணப்படும். ஆனால் சில காரணங்களால் அவர்களின் தோல் சாதாரண இளஞ்சிவப்பு நிறத்தைவிட வேறு நிறங்களாக மாற்றமடையலாம்.

1. அதிகளவு மெலனின் (Melanin) எனப்படும் நிறப்பொருள் தோலில் இயற்கையாகவே காணப்படின் (உதாரணம் ஆபிரிக்க குழந்தைகள்) அவர்கள் கடும் நிறம் (Dark complexion) உள்ளவர்களாக இருப்பார்கள்.

2. தோலில் பிளிறூபின் (Bilirubin) எனப்படும் மஞ்சள் பதார்த்தம் படியுமானால் தோல் மஞ்சள் நிறமடையும். இந்த நிலையைப் பற்றி கீழ்வரும் பந்திகளில் விளக்கப் பட்டுள்ளது.

3. குருதியில் ஈமோகுளோபின் (Haemoglobin) எனப்படும் சிவப்பு நிறத்துக்கான காரணி குறைவடைந்தால், தோல் வெளிறிக் காணப்படும் இதை நாம் குருதிச்சோகை (Anaemia) எனக் கூறுவோம்.

4. அதேபோல் குருதியில் ஈமோகுளோபினால் கொண்டுசெல்லப்படும் ஒட்சிசனின் அளவு குறைவடைந்தால், தோல், வாய், உதடு என்பன நீல நிறமடைந்து (Cyanosis) காணப்படும்.

5. சிலவேளைகளில் குருதியிலுள்ள செங்குருதிக் கலங்களில் (Red Blood Cells) சாதாரண அளவைவிட அதிகரிப்பின் தோல் கடுஞ் சிவப்பு (Plethoric) நிறமடையலாம்.

மேற்கூறியவற்றில் கடைசி 4 நிலைகளும், பச்சிளம் பாலகர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை. எனவே இந்த மாற்றங்களைப் பெற்றோர் அவதானிப்பின் உடனடியாக குழந்தையை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

இனி தலைப்பில் மஞ்சள் எச்சரிக்கையென ஏன் குறிப்பிடப்பட்டது என்பதைப் பார்ப்போம். எல்லோருக்கும் சிவப்பு நிறம் ஆபத்தைக் குறிக்கும் எனத் தெரியும் (Red Alert) அதேபோல் பிறந்த குழந்தைகளை எடுத்துக் கொண்டால் தோல் மஞ்சள் நிறமாவதும் ஆபத்தானதே (Yellow Alert) மஞ்சள் நிறத்துக்கான பிளிறூபின் (Bilirubin) எனப்படும் பதார்த்தம் குருதியில் அளவிற்கதிகமாகச் சேர்ந்தால் அது தோல் கண், மூளை மற்றும் உடல் உறுப்புக்களில் படியும். முக்கியமாக மூளையில் பிளிறூபின் படியுமானால் கேனிக்ரறஸ் (Kernicterus) எனும் நிலை உருவாகி பிள்ளையின் மூளை பாதிப்படையலாம். அப்படியான சந்தர்ப்பத்தில் குழந்தை சாந்தமடையாது. உரத்த சத்தத்துடன் அழுது கொண்டேயிருக்கும். அது மட்டுமல்லாது சில சமயங்களில் வலிப்பு ஏற்படுவதோடு, தலையையும் முதுகையும் பின்புறமாக வளைத்த நிலையில் (Opisthotonus) காணப்படலாம். தோல் மஞ்சள் நிறமடைதலை வேளைக்கே கண்டுபிடித்தால் நிச்சயமாக இந்த நிலை ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

பொதுவாக பிறந்த குழந்தைகளில் ஏற்படும் தோல் மஞ்சள் நிறமடைதல் (Neonatal Jaundice) நிலையை அது ஏற்படும் காலத்தைப் பொறுத்து மூன்று வகையாக வகைப்படுத்தலாம்.

1. பிறந்து 24மணி நேரத்துக்குள் மஞ்சள் நிறமடைதல் - இந்த நிலை எப்போதும் ஆபத்தானது. குழந்தை பிறந்து 24 மணி நேரத்துக்கு மஞ்சள் நிறமாக காணப்படின் உடனடிச் சிகிச்சை தேவை.

2. பிறந்த 24 மணிநேரம் தொடக்கம் 14 நாட்கள் வரை - இந்தக் காலப்பகுதியில் சாதாரணமாக அனைத்து குழந்தைகளுமே சிறிதளவு மஞ்சள் நிறமடைவார்கள். இது சாதாரணமானது (Physiological Jaundice) பிறந்த குழந்தைகளில் அதிகளவில் காணப்படும் செங்குருதிக் கலங்களில் சில அழிவடைவதே இதற்குக் காரணம். இந்த நிலை அதிகளவில் ஏற்படினோ அல்லது வேறு பல காரணங்களாலோ தோல் மஞ்சள் நிறமடைதல் அதிகரிப்பின் அதற்குச் சிகிச்சை தேவைப்படும்.

3. பிறந்தபின் 14 நாட்களின் பின்னரும் தோல் மஞ்சள் நிறமடைந்து காணப்படல் - இப்படியான சந்தர்ப்பத்திலும் அதற்கான காரணியை கண்டறிந்து தகுந்த சிகிச்சையளிக்க வேண்டும்.

தோல் மஞ்சள் நிறமடைவதற்கான காரணங்கள்

அடிப்படையில் இரு காரணங்கள் பிளிறூபின் எனப்படும் பதார்த்தம் குருதியில் அதிகரிக்கலாம்.

1. அதிகளவில் பிளிறூபின் உருவாக்கப்படல். - குருதியில் உள்ள செங்குருதிக் கலங்கள் அதிகளவில் உடைந்து. அதிலுள்ள ஈமோகுளோபின் (Haemaglobin) பிளிறூபினாக மாற்றமடையும். இதற்கான மிகப் பொதுவான காரணம் தாயின் இரத்த வகையும், குழந்தையின் இரத்த வகையும் ஒத்துவராத நிலை. உதாரணமாக Rh வகை குருதி வகைப்படுத்தலில் தாய் சுய (-) வர்க்கமாகவும் குழந்தை சுய(+) வர்க்கமாகவும் காணப்படினும் அல்லது A, B, O குருதிவகைப்படுத்தலில் தாய் O வர்க்கமாகவும் குழந்தை A அல்லது B வர்க்கமாகவும் காணப்பட்டால் இரத்த ஒற்றுமை ஏற்படாது. குழந்தையில் அதிகளவிற்கு செங்குருதிக் கலங்கள் அழிய வாய்ப்புண்டு.


2. பிளிறூபின் (Bilirubin) பதார்த்தம் உடலிலிருந்து வெளியேற முடியாத சந்தர்ப்பங்கள். - உடலில் உருவாகும் பிளிறூர்பின் பதார்த்தம் ஈரலில் மாற்றமடைந்து பித்தமாக குடலினூடாக மலத்துடன் வெளியேறும். எனவே ஈரல் கலங்களிலோ அல்லது பித்தக் குழாய்களிலோ பிரச்சினை இருப்பின் பிளிறூபின் வெளியேற்றப்பட முடியாமல் உடலில் தேங்க வாய்ப்பு ஏற்படும். குழந்தை பிறந்தபின் 14 நாட்களின் பின்னரும் தோல் மஞ்சள் நிறமாகவும், மலம் மஞ்சள் நிறம் குறைந்து வெள்ளையாகவும் காணப்படின் இந்த நிலைக்கான பரிசோதனைகள் செய்யப்படும். தகுந்த சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். மேலே குறிப்பிட்ட அடிப்படைக் காரணிகளைவிட உடலிலுள்ள தைரொக்சின் (Thyroxine) எனும் ஓமோன் (Hormone) குறைபாட்டினாலும் குழந்தைக்கு கிருமித்தொற்று ஏற்பட்டாலும் தோல் மஞ்சள் நிறமடைதல் ஏற்படும்.

தோல் மஞ்சளாவதற்கான சிகிச்சை முறைகள்

1. பொதுவாக குருதியிலுள்ள பிளிறூபின் அளவைச் சோதித்து சிகிச்சை தேவைப்படின் நீல நிற ஒளியின் கீழ் குழந்தையை வளர்த்தி, உடலிலுள்ள பிளிறூபின் பதார்த்தத்தை குறைக்க முடியும். இதை ஒளிச்சிகிச்சை (Phototherapy) என்பார்கள்.

2. சில வேளைகளில் பிளிறூபினின் அளவு மிக அதிகமாயின், குழந்தையினுடைய குருதியை, புதிதாய் பெறப்பட்ட வேறு ஒருவரின் குருதியினால் மாற்றவேண்டிய தேவை ஏற்படலாம் (Exchange Transfusion) இந்தச் சிகிச்சை முறையை மிக அவதானத்துடன் அதற்கான வசதியுள்ள வைத்தியசாலைகளிலேயே அளிக்க முடியும்.





Baby with mild jaundice

எனவே தோல் மஞ்சள் நிறமடைதல் என்பதும் ஆபத்தின் அறிகுறியே. இந்த நிலை காணப்படின் உடனடியாக வைத்தியசாலைக்கு குழந்தையைக் கொண்டு சென்று அதற்கான சோதனைகளையும் சிகிச்சையும் பெற்றுக்கொள்ள வேண்டும். பெரும்பாலான, தோல் மஞ்சள் நிறமாவதற்கான காரணிகளிற்கு சிகிச்சை உண்டு. உரிய வேளையில் தாமதமின்றி சிகிச்சையளிப்பின் குழந்தைக்கு மூளையைப் பாதிக்கக்கூடிய ஆபத்திலிருந்து பாதுகாக்க முடியும். எனவே தான் இந்த நிலையை மஞ்சள் எச்சரிக்கை என அழைக்கலாம்.

(நன்றி: Jaffna Diabetic Centre)

# நிகழ்வுகளின் பதிவுகள்....





யாழ்.புதிய மொஹிதீன் ஜும்மா பள்ளியில் நடைபெற்ற இப்தார் நிகழ்வின் போது... (105)






நவாலிப்படுகொலையின் 20 ஆவது நினைவுதினம் நவாலி சென்பீற்றர் தேவாலயத்தில் வண.பிதாசெபஸ்ரியன் றோய் பேடியன் தலைமையில் சமய வழிபாடுகளுடன் கடந்த வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட்ட போது... (09)





யாழ்.இந்துக்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட முத்தமிழ்மாலை 2015 நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றபோது...




இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 5 ஆவது மாபெரும் இரத்ததான நிகழ்வு நேற்றுமுன்தினம் இளவாலை புனித அன்னம்மாள் ஆலய முன்றலில் இடம்பெற்றபோது...

# தமிழ் இனத்தின் பிறப்பு வீதம் குறைவு ஏற்படப் போகிறது மோசமான விளைவு

## சமுதாய மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தமிழ் மக்கள் அடுத்த 15 வருடங்களில் 3 ஆவது சமூகத்தினராக மாற்றப்படும் அபாயம் உள்ளதாக யாழ்.மருத்துவர் சங்கத்தின் தலைவர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு 11.2 வீதமாக இருந்த தமிழர்கள் 2031 ஆம் ஆண்டில் 10.3 வீதமாக மாறும் அபாயம் உள்ளதாக ஆய்வுகள் குறிப்பிடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யூலை 11ஆம் திகதி உலக குடித்தொகை தினத்தை ஒட்டி இலங்கையில் தமிழர்களின் எதிர்கால இருப்பு தொடர்பாக யாழ்.ஊடக அமையத்தில் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யுத்தம், மீள்குடியேற்ற மறுப்பு, குற்றங்களுக்கான நீதி மற்றும் இழப்பீடு வழங்கப்படாமை, திட்டமிட்ட பாரபட்சங்கள் போன்றவற்றினால் பாதிக்கப்படும் இனமாக இலங்கையில் தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் உலகத்தில் போருக்குப் பின்னர் உச்சகட்டமான சனத்தொகை வளர்ச்சி பெற்ற நாடுகள், அல்லது பிரதேசங்கள், போன்று வடகிழக்கு மாகாணங்களில் போருக்கு பின்னர் சனத்தொகை வளர்ச்சியடையவில்லை.

வடகிழக்கு மாகாணங்களில் 89 ஆயிரம் விதவைகள் உள்ளனர். இதற்குமேல் வடகிழக்கு மாகாணங்களில் ஆண்களின் தொகையை விட பெண்களின் தொகை மிக அதிகம். இதற்கும் போர், காணாமறபோதல், இறப்பு போன்றன காரணங்களாகும்.

இந்நிலையில் ஆண், பெண் எண்ணிக்கை சமநிலையை சமப்படுத்துவதற்கான எவ்விதமான செயற்பாட்டுத் திட்டங்களும் எம்மிடம் இல்லை. இதேபோன்று சனதொகை அதிகரிப்பதற்கான திடடங்களும் எங்களிடம் இல்லை.

ஆனால் சனத்தொகை அதிகரிப்பை செய்யவேண்டிய கட்டாயத்தில் இன்றைய நிலையில் தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் சனத்தொகை அதிகரிப்பிற்கு முதலில் நாங்கள செய்யக்கூடிய விடயம் என்ன வென்றால் வடகிழக்கு மாகாணங்களில் உள்ள காலம் தாழ்த்திய திருமணங்களை நிறுத்த வேண்டும்.

இலங்கையில் காலம் தாழ்த்திய திருமணங்களை மேற்கொள்வதில் தமிழர்களே முதலிடத்தில் உள்ளார்கள். அதிலும் யாழ்ப்பாணம் முதலாவது இடத்தில் இருக்கின்றது.

இவ்விடயத்தில் தமிழ் ஆண்கள் 27.4 வீதமாகவும், தமிழ் பெண்கள் 24.4 வீதமாகவும் இருக்கின்றது. ஆனால் இந்த வீதத்தின் அடிப்படையில் சிங்களவர்கள் சற்று குறைவாகவும், அதனை விட குறைவாக முஸ்லிம்களும் உள்ளனர்.

அதாவது அவர்கள் உரிய வயதில் திருமணம் செய்கின்றனர். நாங்கள் உரிய வயதில் திருமணம் செய்ய முடியாமைக்கு, பல காரணங்கள் இருக்கின்றன.

கால தாமதமான திருமணங்கள் சனத்தொகை வளர்ச்சியை மட்டுமல்லாமல், பிறக்கும் அடுத்த சந்ததியையும் பல்வேறு வகையில் பாதிக்கின்றது.

இதேவேளை யுத்த சூழ்நிலைகள் உருவாக முன்னர் எங்கள் சமூகத்தில், குழந்தைகள் எண்ணிக்கை 4.1ஆக இருந்தது. அதாவது ஒரு குடும்பத்தில் 4 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறந்தது. ஆனால் அது படிப்படியாக குறைவடைந்து 2000ஆம் ஆண்டு 2.1ஆக இருந்ததுடன், 2005ஆம் ஆண்டில் 2.3 ஆக மாறி போருக்குப் பின்னர் 2011ஆம் ஆண்டில் 2.4 ஆக காணப்பட்டது. எனவே இந்த அளவு போதாது,

முஸ்லிம்கள் 3.3ஆக காணப்படுகின்றார்கள். சிங்க ர்களும அதிகம். இந்நிலை தொடர்ந்தால் 2012 ஆம் ஆண்டில் 11.2 வீதமாக இருந்த தமிழர்கள் 2021 ஆம் ஆண்டில் 10.8 வீதமாகவும், 2031 ஆம் ஆண்டில் 10.3 வீதமாகவும், 2041 ஆம் ஆண்டில் 9.8 வீதமாகவும் வீழ்ச்சியடையும் நிலை ஏற்படும்.

இதே நிலையில் 2012ஆம் ஆண்டு 74.9 வீதமாக இருந்த சிங்களவர்கள், 2041 ஆம் ஆண்டு 100 வீதமாகவும், 2012ஆம் ஆண்டில் 9.2 வீதமாக இருந்த முஸ்லிம்கள் 2041ஆம் ஆண்டில் 11.7 வீதமாகவும் மாறும் அபாயம் உள்ளது.

தென்னிலங்கையில் சனத்தொகை வளர்ச்சிக்கு கொடுக்கப்படும் ஊக்குவிப்பு வடகிழக்கு மாகாணங்களுக்கு இல்லை.

மாறாக கட்டாய கருத்தடைகளும் சனத்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுமே தொடர்கின்றது. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் மட்டும் 16 வீத மானவர்கள் வறுமையில் உள்ளனர்.

இலங்கையில் மந்தபோசனை உள்ள குழந்தைகள் உள்ள மாவட்டங்களில் வவுனியா 51 வீதம் யாழ்ப்பாணம் 41 வீதம் இலங்கையில் சனத்தொகை குறைந்த மாவட்டங்களாக முல்லைத்தீவும், மன்னாரும் காணப்படுகின்றது.

எனவே இவற்றை, நிவர்த்தி செய்யவேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. இந்நிலையில் தமிழர்கள் காலம் தாழ்த்திய திருமணங்களை முழுமையாக நிறுத்த வேண்டும். பொருளாதார ரீதியாக வலுப்பெற வேண்டும்.

பெண்கள் தொகை ஆண்கள் தொகையுடன் சமப்படுத்தப்பட வேண்டும். தமிழ்ப் பெண்களுக்கான பாதுகாப்பான சூழல் உருவாக்கப்பட வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.(25)

# மாவட்ட சட்டமா அதிபர் இல்லம் மன்னாரில் அமைப்பு



மன்னார் மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இல்லத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை மன்னார் சின்னக் கடையில் இடம்பெற்றது. இல்லத்திற்கான அடிக்கல்லை சட்டமா அதிபர் யுவான்ஜன வனசுந்தர விஜயதிலக வைபவரீதியாக நாட்டிவைத்தார். 24 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் சட்டமா அதிபர் திணைக்கள சட்டவாதிகள் சுமதி தர்மவர்த்தன, குமார் ரெட்ணம், சூசைதாஸ், நிசாந் நகரட்ணம், முகைதீன், மன்னார் மாவட்ட மேல் நீதிமன்ற ஆணையாளர் மகிந்த பிகிதெனிய, மன்னார் மாவட்ட நீதிபதி ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா, வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற ஆணையாளர், அதன் மாவட்ட நீதிபதி, செயலாளர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய உட்பட இராணுவ உயர் அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.




## கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

## முகாமைத்துவ உதவியாளர்கள்

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமற்ற - பிரிவு II பதவி (கம்பனி பரிசோகர்) வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் விசேட சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த ஏதாவது ஒரு பாடத்தில் மட்டும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் படியாக 'கம்பனி பதிவாளர் நாயகம், கம்பனி பதிவாளர் திணைக்களம், இல.400, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'கம்பனி பதிவாளர் திணைக்கள கம்பனி பரிசோதகர் பதவிக்கான ஆட்சேர்ப்பு' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

## இலங்கை அஞ்சல் திணைக்களம்

## கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர்கள்

இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் 578 இற்கு மேற்பட்ட பதவிகளை நிரப்பும் பொருட்டு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்கள் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டமாயின் மூன்று பாடங்களில் மட்டும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்) மற்றும் கணினிக் கல்விப் பாடநெறியொன்றினையும் கற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், த.பெ.இல. 1503, கொழும்பு' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக் கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத/ தொழில்நுட்ப பதவித் தொகுதியின் III ஆந் தரத்தின் அஞ்சல் சேவை அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2015)' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## முகாமைத்துவ உதவியாளர்கள்

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ், கணிதம் மற்றும் ஆங்கில மொழி ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் 'பணிப்பாளர் நாயகம், இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக் கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

க.பொ.த. உயர்தரம் கற்றவர்கள் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்க விண்ணப்பிக்க முடிவதோடு ஏனைய 24 வகையான பதவி வெற்றிடங்களுக்கு சகல விதமான பட்டதாரிகளும் விண்ணப்பிக்க முடியும்.

தொகுத்து வழங்குவது : சி.என்.எச். சாலிஸ்

# நாட்டை மேற்குலகிடம் அடகு வைத்தது யார்

## அர்ஜுன கடும் சீற்றம்



(கொழும்பு)

ஆட்சியிலிருந்து மக்களால் வெளியேற்றப்படடவர்கள் நாட்டை கடன் சுமையுடனேயே கையளித்துச் சென்றுள்ளனர் என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், பொது மக்களின் பணத்தினை அத்தியாவசியமற்ற தேவைகளுக்கு பயன்படுத்தி நாட்டில் பெரும் பொருளாதார மற்றும் நிதி நெருக்கடியினை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் ஏற்படுத்தியிருந்தனர்.

எனினும் சர்வதேசத்திடம் பாரிய தொகை நிதி கடனாக பெறப்பட்டே அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. கிரேக்க நாட்டின் தற்போதைய நிலையை அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

கடன் சுமையினால் தனது நாட்டை ஐரோப்பியத்திடம் அடகு வைக்கும் நிலைக்கு உள்வாங்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க சர்வதேசங்களில் கடன் பெற்று அத்தியாவசியமற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமா என்ற கேள்வி தேசிய அரசாங்கத்திடம் எழுந்திருந்தது.

ஆகையினாலேயே ஆட்சி மாற்றத்தின் பின்னர் அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட்டு குறைந்த செலவில் முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

அதன் அடிப்படையில் தற்போது அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் மீள முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அம்பாந்தோட்டையில் துறைமுக வர்த்தகத்திற்காக புதிய முதலீட்டாளர்கள் கேள்வி கோரியுள்ளனர். அது தொடர்பில் நாம் கலந்துரையாடி வருகின்றோம்.

விரைவில் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதை அனைவரும் அறிந்து கொள்வீர்கள்.

ஆனால், முன்னைய அரசாங்கத்தினைப் போன்று மக்களின் பணத்தினை வீண் விரயம் செய்ய நல்லாட்சிக்கான தேசிய அரசாங்கம் ஒருபோதும் துணைபோகாது என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மேலும் தெரிவித்தார்.

# விசேட பயிற்சி செயலமர்வு இது மலையகத்தில்

(யாழ். நிருபர்)

மலையகத்தில் முதல் தடவையாக வடபகுதியைச் சேர்ந்த ஆறுதல் இலங்கை நிறுவனமும் ,தொண்டைமானாறு வெளிக்கள நிலையமும் இணைந்து ஹட்டன் மற்றும் நுவரெலியா கல்வி வலயங்களில் இவ்வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட பயிற்சிச் செயலமர்வுகளை தலவாக்கலை தமிழ்மகா வித்தியாலயத்திலும் ஹட்டன் ஹைலன்ஸ் மத்திய கல்லூரியிலும் நடாத்தின.

ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் அந்தோனி மத்தியு தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் வெளிக்கள நிலையத்தின் உபதலைவரும் ஆறுதல் நிறுவனத்தின் ஆலோசகருமான ந. அனந்தராஜ், வெளிக்கள நிலையப் பொருளாளர் நா. உலகநாதன், ஆறுதல் நிறுவனத்தைச் சேர்ந்த பரமநாதன், ரவிராஜ், ராமேஷ் ஆகியோருடன் யாழ்.மாவட்டத்தின் முன்னணி ஆசிரியர்களான இ.குகானந்தன், சி.சிவராம், செல்வி ந. கலா, எம்.ஏ. ரூபநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (10)

# சவால்களை எதிர்கொள்ளும் ஆளுமை முன்பள்ளி சிறார்களிடம் வேண்டும்

## உதவிக் கல்விப் பணிப்பாளர் உரை

(யாழ். நிருபர்)

நவீன உலகின் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் ஆளுமை மிக்கவர்களாக உருவாகக் கூடியவாறு முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான கற்றல் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

இவ்வாறு கோண்டாவில் "சில்றன் வேல்ட்" ஆங்கில தமிழ் மொழி மூலமான பாலர் பாடசாலையின் விளையாட்டு விழாவில பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வலிகாமம் கல்வி வலயமுன்பள்ளி, உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி விக்கினேஸ்வரி கந்தசாமிக் குருக்கள் குறிப்பிட்டார்.

முன்பள்ளி இயக்குநர் கி.சதீஸ்குமார் தலைமையில் கோண்டாவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் தொடர்ந்தும் பேசுகையில்,

நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக் கேற்ப பொருட்களை இனங்காணத்தக்க அதாவது கண்டறியும் அறிவுத் தேடலுடன் கூடிய வகையில் முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான கல்விச் செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.

இன்றைய உலகில் உடல், உழைப்பு மற்றும் தேக அப்பியாசம் என்பன அருகி வருவதால் ஆரோக்கியமான வாழ்விற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

பிள்ளைப் பருவத்தில் இருந்தே விளையாட்டை மையமாகக் கொண்ட கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் உடல், உள ஆரோக்கியமுள்ள சமுதாயத்தை உருவாக்க முடியும்.

விளையும் பயிரை முளையில தெரியும்; வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும் என்ற பழமொழிக்கேற்ப முன்பள்ளிப் பிள்ளைகளை சுறுசுறுப்புள்ளவர்களாக விளையாட்டில் ஆர்வமுள்ளவர்களாக வளர்த்தெடுப்பதன் மூலம் சிறந்த எதிர்காலச் சந்ததியை உருவாக்க முடியும்.

பிள்ளைப் பருவத்திற்கு ஏற்ற விளையாட்டுக்களை மையமாகக் கொண்ட செயற்பாடுகளின் ஊடாக சமூகத் தேவையை இனங்கண்டு அதற்கு ஏற்ற வகையில் பிள்ளைகளை நெறிப்படுத்த வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

கோண்டாவில் இந்துக்கல்லூரி அதிபர் நா.சிவநேசன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இ.துரைசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கிராம அலுவலர் திருமதி குணரஞ்சிதம் பிரதாபராஜன், உடற்கல்வி ஆசிரியர் திருமதி ஜெயப்பிரியா பத்மநேசன், பிரம்மஸ்ரீ ச. சிறிஸ் கந்தராஜக் குருக்கள் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (10)

# தேர்தல் கால கடமை ஆளணி திரட்டல் ஆரம்பம்

நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் கடமையாற்றுவதற்கு அரசாங்க அலுவலர்களை முழுமையாக இணைத்துக் கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அவசர நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக சம்பள தொகுதியை மையமாக கொண்டதும் கடந்தகால அனுபவங்களை மையமாகக் கொண்டு உதவி தெரிவத்தாட்சி அலுவலர், சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், கனிஷ்ட தலைமைதாங்கும் அலுவலர், வாக்கெடுப்பு நிலைய எழுதுநர் ஆகியோரை தேர்ந்தெடுக்கவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு அந்தந்த மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களை தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார். (92)

# முதியோர் பராமரிப்பு டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

தேசிய அபிவிருத்தி நிலையத்தில் பிராந்திய நிலையங்கள் மூலம் "முதியோர் பராமரிப்பு டிப்ளோமா" "சமூக பராமரிப்பு டிப்ளோமா" ஆகிய கற்கை நெறிகளைப் பயில்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேற்படி கற்கை நெறிக்கான வகுப்புகள் வாராந்தம் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

விண்ணப்பங்கள் ஆகஸ்ட் 3 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் 488A, நாவலர் வீதி, இராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பிவைக் குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

# வெளிவந்தது சிவப்பு அறிக்கை

ஒன்பது வருடங்களுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் வெளிநாடொன்றுக்கு தப்பிச் சென்றுள்ளார் என்றும் அவரைக் கைது செய்வதற்கு கொழும்பு மேலதிக நீதவான் நிரோஷா பெர்ணான்டோ, சிவப்பு அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

சரண் என்றழைக்கப்படும் விவேகானந்தன் ஸ்ரீகாந்தன் என்பவரைக் கைது செய்வதற்கான சிவப்பு அறிக்கையே இவ்வாறு விடுக்கப்பட்டுள்ளது.

# இசை விழா கொழும்பில் இன்று

தமிழ் கீர்த்தனைகளின் இசை விழா இன்று மாலை 5.15 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆலாபனா சங்கீதசபாவின் தலைவர் ஏ.கே. கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தமிழ்க் கீர்த்தனைகளின் இசைச் சிறப்பினை சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் பிரமிளா குருமூர்த்தி வழங்கவுள்ளார்.

வயலின் மற்றும் மருதங்க இசையினை சுவர்ணாங்கி மற்றும் எஸ்.மாதவன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (10)

# கற்றல் செயற்பாட்டை வலுவூட்டல்



ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை வலுப்படுத்தும் நோக்கில், லண்டனை தளமாகக்கொண்ட நம்பிக்கை ஒளி அமைப்பின் இணைநிறுவனமான இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையினரால் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளுக்கு புலமை ஒளி புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

இதன் ஓர் கட்டமாக வவுனியா வடக்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த 57 பாடசாலைகளுக்கு, 615 புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி, ஓமந்தை கோட்டக்கல்விப் பணிப்பாளர் தா.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் இ.இந்திரராசா, அதிபர்கள், நம்பிக்கை ஒளி அமைப்பின் இணைப்பாளர் சுபாஸ்கரன், உதவிக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பிரதிநிதிகள், ஆசிரிய ஆலோசகர்கள் கலந்துகொண்டனர்.

60. இலங்கையிலுள்ள மாவட்டங்கள்
1) 28 2) 24 3) 25

61. முதன் முதலில் தேசியகீதம் பாடப்பட்ட சந்தர்ப்பம்
1) 1942 ஆம் ஆண்டு 2) 1948 ஆம் ஆண்டு 3) 1950 ஆம் ஆண்டு

62. இசையிலுள்ள சுரங்களின் எண்ணிக்கை
1) 12 2) 9 3) 7

63. பாய்க்கப்பல் கடலில் செல்வது
1) காற்றின் உதவியால் 2) துடுப்பின் உதவியால் 3) அலையின் உதவியால்

64. குழுவாக வேலை செய்யும் போது பாடல் பாடுவது
1) களைப்பில்லாமல் இருக்க 2) கட்டாயமாக பாட வேண்டும் என்பதால்
3) பாடல் மறந்துவிடும் என்பதால்

65. விளையாட்டிற்குப் பயன்படுத்தப்படும் மாபிளின் வடிவம்
1) உருளை 2) கோளம் 3) கனவுரு

66. எம்மால் செய்யக்கூடிய மாற்றம் அல்லாதது
1) வீட்டில் சுவர் அலங்காரம் செய்து வைத்தல்
2) வீட்டுத்தோட்டத்தினை துப்புரவு செய்தல்
3) காலை உணவு உட்கொள்ளல்


67. மழைப்பெய்த பின் சூழலில் காணப்படாதது
1) மண் கழுவிச் சென்றிருத்தல் 2) குழிகளில் நீர்தேங்கியிருத்தல்
3) தாவரங்கள் வாடிக் காணப்படுதல்

68. நாம் சந்தோசமாக இருப்பது
1) பாடசாலை விட்டு ஒருவரை ஒருவர் பிரியும் போது
2) வீட்டிற்கு நண்பர்கள் வந்த போது
3) நண்பனுக்கு துன்பம் ஏற்பட்ட போது

69. வகுப்பறையில் வேலைகளை இலகுவாக்க பயன்படுத்தும் கருவியல்லாதது
1) பென்சில் கூராக்கி 2) துளைக்கருவி (பஞ்சர்) 3) சிமெந்து கரண்டி

70. குரோட்டன் செடி ஒன்றை உருவாக்க தண்டை வெட்ட வேண்டிய அளவு
1) 15cm 2) 10cm 3)25cm

71. இவ்வுருவில் $\frac{1}{2}$ பகுதிக்கு நிறம் தீட்டுக



72. ஒரு அன்னாசிப்பழத்தின் நிறை 1kg எனின் 5 அன்னாசிப்பழங்களின் நிறை யாது?
..............................................................................................

நேற்று பிரசுரமாகிய வினாக்களுக்கான விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (01) 01. 2 | 02. 1 | (02) 03. 2 | 04. 2 | (03) 5. 2 |
| 6. 1 | 7. 3 | (04) 8. 1 | 9. 2 | (05) 10. 2 |
| 11. 3 | (06) 12. 1 | 13. 2 | 14. 1 | 15. 2 |
| (07) 16. 2 | 17. 1 | (08) 18. 3 | 19. 1 | (09) 20. 2 |
| 21. 1 | 22. 3 | (10) 23. 1 | 24. 3 | 25. 1 |
| 26. 1 | | | | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



**தரம் - 3 பரீட்சை முன்னோடி - 2015**

பகுதி - II
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க
(01) கீழே தரப்பட்ட பாடலை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க

தேன் போல் இனியன சொல்ல வேண்டும்
தென்னை போல் நன்றி காட்ட வேண்டும்
மான் போல் மானம் உணர வேண்டும்
மாடு போல் என்றும் உழைக்க வேண்டும்
காகம் போல் கூடி வாழ வேண்டும்
கன்று போல் கூடி வாழ வேண்டும்
மேகம் போல் எங்கும் செல்ல வேண்டும்
மழை போல் நன்மை பொழிய வேண்டும் (தி.பட்சிராஜன்)

01. நாம் எதைப்போல் பேச வேண்டும் ? ..............................
02. நன்றி எவ்வாறு காட்ட வேண்டும்? ..............................
03. மான் போல் நாம் எதை உணர வேண்டும்? ..............................
04. நாம் எதைப்போல் உழைக்க வேண்டும்? ..............................
05. நன்மைகளை எதைப்போல் பொழியவேண்டும்? ..............................
06. பின்வருவனவற்றிக்கு ஒத்தசொல் தருக
1. நன்றி .............................. 2. கூடி ..............................
07. எதிர்ச்சொல் தருக
1. நன்மை .............................. 2. மானம் ..............................
08. பின்வருவனவற்றிக்கு ஒத்தசொல் தருக
1. தேன் .............................. 2. துள்ளுதல் ..............................
09. சேர்த்தெழுதுக தெங்கு + காய் ..............................
10. இப்பாடலை எழுதியவர் யார்? ..............................
(02) பின்வரும் சொற்களை வைத்து வசனம் எழுதுக .
11. உடற்பயிற்சி ..............................
..............................
12. வாழ்த்து ..............................
..............................
13. 

| | | |
|---|---|---|
| க | | 3 |
| வி | ட | 7 |
| ் | ல் | |

இவ்வுருவினுள் உள்ள எழுத்தைக் கொண்டு ஆக்கக்கூடிய இரு எழுத்துச்சொல் இரண்டு தருக?
01 ..............................
02 ..............................
14. மேலே தரப்பட்ட உருவில் காணப்படும் மூன்றெழுத்துச் சொற்கள் இரண்டு தருக?
01. ..............................
02 ..............................

15. கூட்டினுள் தரப்பட்டுள்ள இலக்கங்களின் பெருக்கம் யாது? ....................

**(03) தொடர்புபடுத்துக**

| | |
|---|---|
| 16. விறகை கொத்துதல் | (A) மணிக்கட்டு |
| 17. துணிவெட்டல் | (B) உரல் |
| 18. நேரத்தை அவதானித்தல் | (C) மண்வெட்டி |
| 19. மண்ணைக் கொத்துதல் | (D) கோடரி |
| 20. அரிசி இடித்தல் | (E) கத்தரிக்கோல் |

**(04) பின்வரும் தமிழ்ச்சொல்லின் ஆங்கிலச்சொல்லை அங்கிலத்தில் எழுதுக**

21. பாடசாலை .................... 22. ஆசிரியர் ....................

**(05) சிங்களச்சொல்லிற்கான தமிழ்ச்சொற்களை எழுதுக**

23. நங்கி .................... 24. மல்லி ....................

**(06) பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க**

25. திருக்குறளை இயற்றியவர் யார்? ....................

26. கூடு கட்டி வாழும் பறவை ஒன்று தருக? ....................

27. இரும்பினால் செய்யப்பட்ட ஓர் உபகரணம் தருக? ....................

28. மாலைவேளையில் சூரியன் தெரியும் திசை எது? ....................

29. இலங்கை மக்களின் பிரதான உணவு ....................

30. கம்பளி பெறப்படும் மிருகம் எது? ....................

31. பாண் செய்யும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்? ....................

32. ஒரு வருடத்தில் பாடசாலை நடைபெறும் தவணைகள் எத்தனை? ....................

33. குழந்தைகளுக்கு நோய் வராமல் இருக்கப்போடுவது? ....................

34. பாலைவனக்கப்பல் என அழைக்கப்படும் மிருகம் யாது? ....................

35. $3 + 7 = 10$ இது போன்று 10ஐக் கூட்டுத்தொகையாகப் பெறும் இரு சோடிகளை எழுதுக

1 .................... 2. ....................

36. ஒரு மணித்தியாலயத்தில் A, B ஆகிய இருவரும் 3km நடக்கின்றனர். A ஒரு மணித்தியாலயத்தில் நடக்கும் தூரம் எவ்வளவு?

....................

37. 20 ரூபாவில் எத்தனை 2 ரூபாய்கள் உண்டு?

....................

38. 18 உடன் 3 ஐக் கூட்டி 7 ஐக் கழித்தால் மிகுதி எவ்வளவு?

....................

39. 7 இற்கும் 15 இற்கும் இடையே உள்ள எண்கள் எத்தனை?

....................

40. ஒரு வருடத்தின் இறுதி மாதம் எது?

....................

41. ஒரு வருடத்தில் எத்தனை கிழமைகள் உண்டு? ....................

42. சாதாரண வருடத்தில் எத்தனை நாட்கள் உண்டு? ....................



**(07) கீழே தரப்பட்ட பாடலை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க**

எங்கள் பாடசாலையே
அறிவை ஊட்டும் நிலையமே
அங்கு சென்று கற்பதால்
ஆற்றல் மேலும் வளருமே

வளமும் அறிவும் வளர்ந்திட
உயர்ந்து நாமும் சிறந்திட
ஆசான் சொற்கேட்டு நாம்
அன்பாய் பண்பாய் பயிலுவோம்

43. அறிவூட்டும் நிலையம் எது? ....................

44. ஆற்றலை வளர்க்க நாம் எங்கே செல்ல வேண்டும்? ....................

45. நாம் யார் சொல்லைக் கேட்க வேண்டும்? ....................

46. கற்போம் என்பதன் ஒத்தசொல்லை இப்பாடலில் இருந்து எழுதுக? ....................

47. ஆசான் என்பது யாரைக் குறிக்கின்றது? ....................

**(08) பின்வரும் சொல்லை வைத்து வசனம் எழுதுக**

48 ஆசான் ....................

49. பண்பு ....................

**(09) கீழே தரப்பட்டுள்ள வினைச்சொற்களை எதிர்காலமாக மாற்றி எழுதுக**

47. வருகின்றன .................... 48. பயின்றான் ....................

**(10) பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி பிழையற்ற வாக்கியமாக எழுதுக**

49. நான் னேற்று கோவிலுக்குச் சென்றேன் ....................

50. எனது வீட்டுத்தோட்டத்தில் மள்ளிகைப் பூ நிரைய உண்டு ....................

**(11) கீழுள்ள சொற்களை அகரவரிசைப்படி எழுதுக**

51. பொட்டு, பிள்ளை, பந்து, பூட்டு, பாட்டி, பீடை, போகம், பென்சில், பை, புனல், பேடு பௌமி?

....................

52. பின்வரும் ஆங்கிலச்சொற்களுக்கு தமிழ்க்கருத்தினை எழுதுக

01. BOOK .................... 02. PEN ....................

**(12) சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

53. வாழைப்பூவினை சேதமாக்கும் பிராணி
1) அணில் 2) நத்தை 3) காகம்

54. ஒரு விதை மட்டும் உள்ள பழம்
1) அன்னாசி 2) மாம்பழம் 3) பலாப்பழம்

55. தாவரத்தின் பகுதிகளை உக்கலடையச் செய்யும் பிராணி
1) மண்புழு 2) பூரான் 3) கறையான்


56. சேவலின் கழுத்தில் உள்ள தாடியின் நிறம்
1) வெள்ளை 2) சிவப்பு 3) கறுப்பு

57. சட்டி, பானை செய்ய தேவையான பிரதான பொருள்
1) விறகு 2) களிமண் 3) சிலிக்காமண்

58. மிக உயரமான மலை
1) சிவனொளிபாதமலை 2) பேதுருதாலகால 3) நமுனுகுல

59. நாய் ஒன்றில் ஏற்படக்கூடிய நோய்
1) நீர்வெறுப்பு நோய்
2) அம்மை நோய்
3) டெங்கு

# தேசிய பட்டியல் பரிந்துரை மகிந்தவிடமிருந்து மைத்திரிக்கு



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியலில் உள்ளடக்குவதற்கு, மகிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட அட்மிரல் வசந்த கரன்னகொட உள்ளிட்டோரின் பட்டியலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னமும் அங்கீகரிக்கவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதுடன், அவரது ஆதரவாளர்கள் பலரும் பல்வேறு மாவட்டங்களிலும் போட்டியிடுகின்றனர்.

இந்தநிலையில், தனக்கு ஆதரவான பலரையும் உள்ளடக்கிய பட்டியல் ஒன்றையும் மகிந்த ராஜபக்ஷ தேசியப்பட்டியல் ஆசனங்களை நிரப்புவதற்காக கையளித்திருக்கிறார்.

இந்தப் பட்டியலில் முன்னாள் கடற்படைத் தளபதியும், ஜப்பானுக்கான தூதுவராக இருந்து அண்மையில் திருப்பி அழைக்கப்பட்டவருமான அட்மிரல் வசந்த கரன்னகொடவும் அடங்குகின்றார்.



மேலும் மகிந்த ராஜபக்ஷவினால் தேசியப்பட்டியலுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளோரின் பட்டியலில், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், ஐ.தே.க.வின் முன்னாள் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க, முன்னாள் இராஜதந்திரி தயான் ஜெயத்திலக, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, ஊடகத்துறை அமைச்சின் முன்னாள் செயலர் சரித்த ஹேரத், அரசியலமைப்பு சட்ட நிபுணர் ஜெயம் பதி விக்கிரமரத்ன, விஞ்ஞானியும் வெளியீட்டாளருமான தேவிந்து குமாரதுங்க, ஆகியோர் இடம் பெற்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, தேசியப்பட்டியலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடமில்லை என்றும், புலமையாளர்கள் மட்டுமே அதில் இடம்பெறுவர் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஏழு மாவட்டங்களில் போட்டி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்த, மகிந்த அதிருப்தியாளர்களின் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி எதிர்வரும் பொதுத் தேர்தலில் 07 மாவட்டங்களில் போட்டியிடவுள்ளதாக அதன் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் யானை சின்னத்தில் கொழும்பு, கண்டி, கம்பஹா, இரத்தினபுரி, களுத்துறை, மாத்தளை, காலி ஆகிய மாவட்டங்களில் நல்லாட்சிக்கான முன்னணி போட்டியிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## றமழான் சிந்தனை



சினனப பளளி

**லைலதுல்கத்ர் இரவின் நன்மையை எவர் இழந்து விடுகிறாரோ அவர் நன்மைகள் அனைத்தையும் இழந்தவராவார். துர்ப்பாக்கியம் உடையவர்களை தவிர வேறு எவரும் அவ்விரவின் நன்மையை இழந்து விட மாட்டார்கள்.**

**நூல் - இப்னு மாஜா**

**ஸஹர் முடிவு : அதிகாலை 4.30**
**நோன்பு திறக்கும் நேரம் : மாலை 6.38**

**(105)**

# தேர்தலை கண்காணிக்க EU அதிகாரிகள் தயார்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் கண்காணிப்புக்களை மேற்கொள்ள ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய மற்றும் தெற்காசிய தேர்தல் கண்காணிப்பு நிலையமான (FEMboSA) என்பன தமது உறுப்பினர்களை அனுப்பவுள்ளன.

இதனை பிரதித்தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார். இதில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய அமைப்பு என்பன ஏற்கனவே தமது வரவை உறுதிப்படுத்தி யுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பவ்ரல், சிஎம்இவி, கபே ஆகிய அமைப்புக்களுக்கு கண்காணிப்பு பணிகளுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் வாக்குசாவடிகளுக்குள் செல்ல சிஎம்இவி மற்றும் பவ்ரல் அமைப்புகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் சிஎம்இவி 4500 உறுப்பினர்களையும் பவ்ரல் 15 ஆயிரம் பேரையும் பணிகளில் ஈடுபடுத்தவுள்ளன.

இதேவேளை ட்ரான்பேரன்சி இன்ரநெசனல் அமைப்பு பொதுச் சொத்துக்கள் வீணடிக்கப்படுவதை கண்காணிக்கும் செயற்பாட்டை இன்று முதல் அமுல்செய்யவுள்ளது.

# வேட்பாளர்களுக்கு விருப்பு எண்கள் அடுத்த வாரம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான விருப்பு வாக்கு எண்கள் அடுத்த வாரத்தில் வெளியிடப்பட உள்ளது.இன்று நண்பகலுடன் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் பூர்த்தியாகிறது.

எதிர்வரும் 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் வேட்பாளர்களுக்கான விருப்பு வாக்கு பற்றிய விபரங்கள் வெளியிடப்பட உள்ளன. விருப்பு வாக்கு இலக்கங்களை வழங்கும் நடவடிக்கைகளை 15 மற்றும் 16ஆம் திகதிகளில் பூர்த்தி செய்யத்திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

இன்று காலை 7.30 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய முடியும் எனவும், சரியான முறையில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யுமாறும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் கோரியுள்ளார்.

# ஜே.வி.பி.மீது கண்டனம்

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியமைக்க ஜே.வி.பி. மறைமுகமாக வழி வகுக்கின்றது என்று முன்னிலை சோசலிசக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

மஹரகமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே முன்னணியின் உறுப்பினர் துமிந்த நாகமுவ, ஐக்கிய தேசியக் கட்சியின் நலன்களை பாதுகாக்கும் வகையிலான நடவடிக்கைகளையே ஜே.வி.பி மேற்கொள்வதாக குற்றம் சுமத்தினார்.

கடந்த சில மாதங்களில் ஐக்கிய தேசியக்கட்சிக்காகவே ஜே.வி.பி செயற்பட்டதாகவும் அவர மேலும் குறிப்பிட்டார்.

இரண்டு கட்சிகளும் நாடாளுமன்றத்தில் ஒரே பக்கத்திலேயே நின்று செயற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே தொடர்ந்தும் ஜே.வி.பி. இடதுசாரி கட்சியா என்பதில் சந்தேகம் உள்ளதாக நாகமுவ கேள்வி எழுப்பினார்.






# 30ஆவது அகவையில் கிராம அபிவிருத்தி வங்கி

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி தனது சேவைப்பயணத்தில் 30 ஆவது அகவையை எட்டியுள்ளது. அவ்வங்கி கிராம மட்டத்திலே புறக்கணிக்கப்பட்டு காணப்பட்ட பகுதிகளை இனம் கண்டு வளர்ச்சியடையச் செய்து தனது வளர்ச்சிப்பாதையைக் கொண்டாடுகிறது.

*1985 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க* பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தினூடாக மாவட்ட மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி குறுகிய காலத்தில் 17 மாவட்டங்கள் முழுவதும் தனது கிளை வலையமைப்பினை விஸ்தரித்துக் கொண்டது.

2008 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச்சட்டத்தினூடாக இப் பிராந்திய வங்கிகள் 6 ஒன்றிணைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் சிறந்த தூர நோக்குடனும் 2010ஆம் ஆண்டு மே மாதம் 'பிரதேச அபிவிருத்தி வங்கி' ஆக ஸ்தாபிக்கப்பட்டது. அன்று தன்னம்பிக்கை மற்றும் வங்கியியல்அறிவு எவையுமற்ற பின் தங்கிய கிராம் வாழ் மக்களை அணுகி வங்கி முறைமைக்குள் இணைத்து கிராமிய மக்களின் வாழ்விற்கு அதீத வங்கிச் சேவையை வழங்க உதித்த அபிவிருத்தி வங்கியாக நாம் ஆற்றிய சேவை அளப்பரியன.

'சௌபாக்கியமான இலங்கையை உருவாக்குவதன் பொருட்டு பிரதேச அபிவிருத்தியின் ஊடாக மக்களை வலுவூட்டல்' எனும் நோக்குடன் செயற்படும் இவ்வங்கியானது 265 கிளைகளினுள் சேவையாற்றும் RDB வங்கி 6 மில்லியனைக் கடந்த வாடிக்கையாளர்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், தியாகமும் பொறுப்புடனும் அபிவிருத்தி வங்கி முறைமைக்கு சக்தி வழங்கும் 3000 இற்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டுள்ள வங்கியானது நாட்டின் முதன்மை அரச அபிவிருத்தி வங்கியாகவும் காணப்படுகின்றது.

பிரதேச அபிவிருத்தி வங்கி வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகளை நன்கு கண்டறிந்து அவர்களிற்காகவே விஷேடமாகத் திட்டமிடப்பட்டுள்ள, சிறிய குழந்தைகள் முதல் வயது வந்த சிரேஷ்ட பிரஜைகள் வரையிலான சமூகத்திலுள்ள அனைவரும் உள்ளடங்கும் வகையில் சேமிப்பு கணக்கு திட்டங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வெவ்வேறு வருமானமீட்டும் வியாபார முயற்சிகளுடன் கைத்தொழில்,மீன்பிடி,கால்நடை வளர்ப்பு, வர்த்தக வாணிபம் உட்பட சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிதித் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ளத் தேவையான விஷேடமான நிதி வசதிகள் பல RDB யினால் அறிமுகப்படுத்தப்பட்டது மட்டுமன்றி, மக்களுக்கு அது தொடர்பான நிதி சார் அறிவினை ஏற்படுத்தி நுண்நிதி வசதிகளின் ஊடாக மக்களை வலுவூட்டுவதற்குத் தேவையான விஷேட செயற்றிட்டங்களையும் மேற்கொண்டுவருகின்றது.

மேலும் நாடு பூராகவும் நிறுவப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தரளவிலான முயற்சியாண்மை அபிவிருத்தி சேவை மத்திய நிலையங்கள் ஊடாக முயற்சியாளர்களை தன்னம்பிக்கையுடன் எழுந்து நிற்க மேற்கொள்ளும் பங்களிப்பானது அளப்பரியது.

வாடிக்கையாளர்களிற்கு மேலும் பல வசதிகளுடனான சிறந்த வங்கிச்சேவையினை வழங்கும் நோக்கில் எம்மிடமுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட வங்கி முறைமையின் அடிப்படையில் இன்னும் சில தினங்களில் ஏற்படுத்தப்படவுள்ள தன்னியக்க இயந்திர முறைமையினூடாக (ATM) இச் சேவை மேலும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

# சீனாவை உலுக்கிய சூறாவளி

## இதுவரை 104 பேர் மரணம்




சீனாவை கடுமையாகத் தாக்கிய சூறாவளி காரணமாக 104 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 54 ஆயிரம் வீடுகள் உருக்குலைந்து போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சீன அரசாங்கத்திற்கு சொந்தமான Xinhua செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீனாவில் உள்ள ஸியேங்ஷான் மாகாணத்தில் சூறாவளி தாக்கும் என அந்நாட்டு வானிலை மையம் எச்சரிக்கை விடுத்ததை அடுத்து, 8 இலட்சத்திற்கும் அதிகமான பொதுமக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் மாலை சன்ஹொம் என பெயரிடப்பட்ட சூறாவளி மணிக்கு சுமார் 216 கிலோ மீற்றர் வேகத்தில் தாக்கியது.

Cangnan நகரில் உள்ள ஒரு கான்கிரீட் கட்டடம் இடிந்து விழுந்ததில், சுமார் 41 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடும்புயலில் சிக்கி இதுவரை சுமார் 104 பேர் உயிரிழந்துள்ளதாகவும், சுமார் 190 நபர்கள் காணாமற்போயுள்ளதால், அவர்களின் நிலை குறித்து எந்த தகவலும் இதுவரை கிடைககவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மாகாணம் முழுவதும் புயல் ஏற்படுத்திய பாதிப்பில் சுமார் 54 ஆயிரம் வீடுகள் சேதம் அடைந்துள்ளதாக அந்த செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு Saomai புயல் மிக பயங்கரமான சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் இயற்கை சீற்றங்களினால் இந்தாண்டு மட்டும் ஆயிரத்து 699 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 415 பேரை இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# விண்வெளி பயிற்சிக்கு மீண்டும் சுனிதா



செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்புவதற்காக அமெரிக்கா தயாரித்து வரும் விண்வெளிக் கலனில் பயிற்சி மேற்கொள்ள விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்புவதற்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான "நாஸா" திட்டமிட்டுள்ளது.

இதற்கென போயிங், ஸ்பேஸ் எக்ஸ் ஆகிய தனியார் நிறுவனங்களுடன் இணைந்து, மனிதர்களை தொலைதூர விண்வெளிக்கு எடுத்துச் செல்லும் விண்கலனை நாஸா உருவாக்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியை மேற்கொள்ள சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட அனுபவம் வாய்ந்த விண்வெளி வீரர்களான ராபர்ட் பென்கென், எரிக் போய், டக்ளஸ் ஹர்லீ ஆகிய விண்வெளி வீரர்களும், அந்தப் பயிற்சியை மேற்கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தகரீதியிலான புதிய விண்கலனை உருவாக்கும் பணியில் இந்த நான்கு வீரர்களும் போயிங், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவார்கள் என நாஸா அதிகாரி சார்லஸ் போல்டன்தெரிவித்துள்ளார்.

# வான்தாக்குதல்; சிரியாவில் 28 பேர் பலி

சிரியாவின் வட பகுதியில், ஐ.எஸ் ஆயுததாரிகளின் நிலைகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட வான்வழித் தாக்குதலில் 28 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஐ.எஸ் ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டிலுள்ள அல்பாப் நகரின் மீது சிரிய பாதுகாப்பு படையினர் நேற்று வான்வழி தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இந்த தாக்குதலில் 3 குழந்தைகள் உட்பட பொதுமக்கள் 19 பேரும் உயிரிழந்துள்ளதாக இங்கிலாந்தைச் சேர்ந்த சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ் ஆயுததாரிகளுக்கு எதிராக அமெரிக்க கூட்டுப்படைகளும் வான்தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாலியல் பலாத்கார வழக்கு வழங்கிய தீர்ப்பு வாபஸ்

பாலியல் பலாத்கார வழக்கு ஒன்றை சமரச மையத்துக்கு பரிந்துரை செய்த உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் திரும்பப் பெற்றுள்ளது. அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிக்கு வழங்கப்பட்ட இடைக்கால ஜாமீனும் இரத்துசெய்யப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கில் குற்றவாளியான மோகன் எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் கடலூர் மகளிர நீதிமன்றத்தில் சரணடைய வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. அனைத்து சமரச முயற்சிகளும் நிறுத்தப்படவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தனது உத்தரவில் கூறியுள்ளது.

கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவர், மோகன் என்பவரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணுக்கு குழந்தையும் பிறந்தது.

இந்த வழக்கை விசாரித்த மகளிர் நீதிமன்றம் குற்றவாளிக்கு 7 ஆண்டு சிறை தண்டனையும் இரண்டு இலட்சம் ரூபாய் அபராதமும் விதித்தது. இதனை எதிர்த்தும் தனக்கு பிணை வழங்க வேண்டுமென்று கோரியும், குற்றவாளி சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையிட்டார்.

அதனை விசாரித்த நீதிபதி பி.தேவதாஸ், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட பெண் மட்டுமல்லாமல், குழந்தையும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மேலும், பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் அவரது பெண் குழந்தையின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு இவ்வழக்கில் சமரச தீர்வு காண முயற்சிக்கலாம் என்று தெரிவித்தார்.

குற்றவாளி மோகனுக்கு இடைக்கால பிணையும் வழங்கப்பட்டது. ஆனால், இந்தத் தீர்ப்பு மாநிலம் முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதற்கிடையில், மத்தியப் பிரதேச நீதிமன்றம் ஒன்று, பாலியல் பலாத்கார வழக்கு ஒன்றை சமரச மையத்திற்கு அனுப்பியது.

இது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு வந்த போது, பாலியல் பலாத்கார வழக்கில் சமரசம் என்பது பெண்ணின் கண்ணியத்துக்கு எதிரானது என்றும் சமரச மையத்திற்கு அனுப்பும் முடிவு தவறானது என்றும் குறிப்பிட்டது.

இந்த நிலையில், சர்ச்சையை ஏற்படுத்திய இந்த உத்தரவை சென்னை உயர் நீதிமன்றம் திரும்பப்பெற்றுள்ளது.

# கிரேக்க நெருக்கடி நடக்கப்போவது என்ன?



கிரேக்கத்தின் கடன்நெருக்கடிக்கு தீர்வுகாணும் முயற்சியாக யூரோ வலய நிதியமைச்சர்கள் பிரசல்ஸில் நேற்று கூடி பேச்சுவார்த்தை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 9 மணிநேரம் நடந்த "மிகவும் சிரமமானது" என்று வர்ணிக்கப்பட்டிருந்த பேச்சுவார்த்தை உடன்பாடு எதுவும் இன்றி முடிவுக்கு வந்தது. புதிய கடன்மீட்பு உதவித் திட்டத்தின் கீழ் சுமார் 70 பில்லியன் யூரோ பணத்தை கிரேக்கம் எதிர்பார்க்கின்றது.

பதிலுக்கு, அரச செலவீனங்களில் மேலும் குறைப்புகளை கொண்டுவர வேண்டும் என்று கிரேக்கத்திடம் கோரப்படுகின்றது.

நேற்று மாலையில் யூரோ வலய நிதியமைச்சர்களை யூரோ வலய அரச தலைவர்கள் சந்திக்கவுள்ளனர். கிரேக்கம் தொடர்பான பேச்சு வார்த்தைகள் முடிவுக்கு வரும் வரை இந்த சந்திப்பு தொடரும் என்று ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் டொனால்ட் டஸ்க் கூறியுள்ளார். ஐரோப்பிய ஒன்றிய அரச தலைவர்கள் 28 பேரும் நேற்று மாலை கலந்து கொள்ள விருந்த மாநாடு ஒன்றையும்டொனால்ட் டஸ்க் ரத்துசெய்துள்ளார்.

### கடலில்....

மூன்றாவது வழிமுறை, அந்த வளைகுடா கசிவில் அமெரிக்கா செய்ததுபோல் எண்ணெயைக் கடலிலேயே எரித்துவிடுவது.

தீர்வு முறைகள் எதுவானாலும், கசிவுகளினால் ஏற்படும் அபாயம் நிறையவே என்பதால் உலகெங்கிலும் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கசிவு ஏற்படாமல் இருக்கவும், நடந்துவிட்ட கசிவுகளை பாதிப்பு இல்லாமல் அகற்றவும் பலவித ஏற்பாடுகளை அரசாங்கங்கள் முனைந்து செயற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். பொருளாதாரத்தில் உலகம் வேகமாக முன்னேறி வரும் இந்தக் காலகட்டத்தில் இயற்கையின் வரப் பிரசாதங்களை தொலைத்துவிடாமல் இருப்பதும் மிக அவசியம்.

தற்போது இந்த 2015இல், எண்ணெய்க் கசிவை அகற்ற பல நவீன உத்திகள் கையாளப்படுகின்றன. எண்ணெயை சிதற அடித்து இயற்கை தரவீழ்ச்சி ஏற்படுத்த முனையும் ஸ்ப்ரே முறையில் இரசாயனப் பொருட்களுக்கு பதிலாக இயற்கையான ஓர்கானிக் பொருட்கள் மூலம் செய்ய முனைகிறார்கள். இன்னும் இந்த முறையில் எண்ணெய்க் கசிவை அகற்ற ஆராய்ச்சிகள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன.

எண்ணெய்க் கசிவின் அருகில் பறவைகள் வந்துவிடாமல் அவற்றைப் பாதுகாக்க அவற்றைப் பயமுறுத்தி விரட்டும் வழிவகைகளும் பின்பற்றப்படுகின்றன. கசிவை வாரி எடுக்க இன்னும் நூதனமான இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

# செர்பிய பிரதமர் மீது கல் வீசித்தாக்குதல்

செர்பியா நாட்டு பிரதமர் அலெக்சாண்டர் வூசிக் மீது மக்கள் கற்களை வீசி தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். போஸ்னியா போடோகரி நகரில் இனப்படு கொலையின் 20 ஆவது ஆண்டு நினைவுநாள் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நினைவு நிகழ்வில் செர்பியா நாட்டு பிரதமர் கலந்து கொண்ட நிலையில், திடீரென ஆத்திரம் அடைந்த பொது மக்கள் கலவரத்தில் ஈடுபட ஆரம்பித்தனர்.

இதனால் பிரதமரை பாதுகாவலர்கள் காப்பாற்றி அவ்விடத்தை விட்டு அழைத்துச் சென்றுள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரைபநீட்சா படுகொலையின் 20 ஆவது ஆண்டுப் பூர்த்தி நினைவு நிகழ்வுகள் பொஸ்னியாவில் இடம்பெறவுள்ளன.

பொஸ்னியா யுத்தத்தின் போது பொஸ்னிய செர்பிய படைகளால் 8 ஆயிரம் முஸ்லிம் ஆண்களும் சிறுவர்களும் கொலை செய்யப்பட்டிருந்தனர். இந்த நினைவு நிகழ்வுகளில் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் உள்ளிட்ட பிரமுகர்களுடன் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களும் பங்கேற்கவுள்ளனர்.

# நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களியாது புறக்கணிப்போம்

## குடத்தனை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் எச்சரிக்கை

(குடத்தனை)

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்காது புறக்கணிக்கப் போவதாக குடத்தனை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்,

குடத்தனைச் சந்தியில் இருந்து பொற்பதி வரை 3.5 கிலோ மீற்றர் நீளம் கொண்ட பருத்தித்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான வீதி, கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னரே புனரமைக்கப்பட்டது. அதன் பின் வன்செயல், நிஷா புயல், சுனாமி, மண் அகழ்வுக்காக பாவிக்கப்பட்ட வாகனங்கள் அதிகளவில் சென்றமை ஆகிய வற்றின் காரணமாக வீதி பழுதடைந்து போக்குவரத்து செய்ய முடியாமல் மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

இவ்வீதியால் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இப்பகுதியில் பிடிக்கப்படும் மீன்களைக் கொள்வனவு செய்ய இவ்வீதி மிகவும் மோசமான நிலையில் இருப்பதினால் மீன் வியாபாரிகள் இங்கு வந்து கொள்வனவு செய்யத் தயங்குகின்றனர்.

இங்கு தினசரி ஆறு தடவைகள் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து அடிக்கடி பழுதடையவும், அத்துடன் தடம் புரளவும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. அத்துடன் பயணிகள் சிரமத்தின் மத்தியில் ஆபத்தான நிலையில் பயணம் செய்கின்றனர். அதே சமயம் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிகள், கர்ப்பவதிகள் மிகவும் பாதிப்படைகின்றனர்.

மேலும் இ.போ.ச.பேருந்தில் பயணிக்கும் பிரயாணிகளின் பயண நேரமும் அதிகரிக்கின்றது.

இவ்வீதி திருத்தப்பட வேண்டிய முக்கியம் பற்றி பருத்தித்துறை பிரதேசசபை அதிகாரிகள், அரச அதிகாரிகள் ஆகியோர் கவனத்திற்குப் பல தடவைகள் தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

இவ்விடயத்தில் எல்லாத்தரப்புகளும் கவனத்தில் எடுக்காமையினால் எதிர்வரும் ஆவணி மாதம் 17 ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் குடத் தனை வடக்கு, கிராம வாக்காளர்களாகிய நாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக வாக்களிக் காது பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(18)

## முன்னாள்...

பொறுப்புணர்வோடு கலந்துரையாடினார்கள். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் பல்லின கலாசாரப் பின்னணி கொண்ட பிரதேசங்களிலிருந்து தமிழர்களுடைய வாக்குகளைத் திடீரென பறிக்கும் வகையில் நாம் களத்தில் இறங்குவது ஒட்டுமொத்த தேசிய ரீதியாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் களின் எண்ணிக்கையை பாதிக்கும் என்பதால் கிழக்கில் போட்டியிடாமல் வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும் போட்டியிடத் தீர்மானித்தோம்.

வன்னியில் போராளிகள் மிக உற்சாகத்தோடு போட்டியிட முன்வந்தார்கள்.

ஆனால் பல சமூகத் தலைவர்கள் குறிப்பாக மதத் தலைவர்கள் எங்களோடு தொடர்புகொண்டு வன்னி மாவட்டத்தில் நீங்கள் போட்டியிட்டால் தேசிய ரீதியாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறினர்.

இதனால் நாங்கள் யாழ்.மாவட்டத்தில் மட்டும் தற்போது போட்டியிடத் தீர்மானித்துள்ளோம்.

யாழ்.மாவட்டத்திலேயே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் எந்தவித வீழ்ச்சியையும் ஏற்படுத்தாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனநாயகப் போராளிகளின் அமைப்பான எம்மைப் பற்றி அவதூறுப் பிரசாரம் செய்கின்றனர். முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களைக் கூறி வருகின்றனர். கூட்டமைப்பிற்குள்ளேயே ஒரு தெளிவாக பார்வை இருப்பதாகத் தெரியவில்லை.

எங்களது கட்சியின் தெளிவான பார்வையை எமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் கொள்கைப் பிரகடனத்திலே மிகத் தெளிவாக வெளியிடுவோம்.

தீர்வுக்காக பல்வேறு திட்டங்களை ஒளித்து வைத்துக் கொண்டிருப்பதாகக் கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைதான் அது பற்றி பகிரங்கப்படுத்தி தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.

மக்களை ஏமாற்றும் தலைமைத்துவங்களிடம் இருந்து மக்களைக் காப்பாற்றி அவர்களுக்கு சரியான தலைமைத்துவத்தை வழங்குவது குறித்து எங்களது கொள்கைப் பிரகடனம் ஓரிரு நாட்களில் வெளியாகுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## மைத்திரியை...

வோர், ஹெரோயின் விற்பனையாளர்கள், எத்தனோல் விற்பனையாளர்களை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வந்து அவர்களைப் பாதுகாத்து, நாடாளுமன்றத்தை திருட்டு குகையாக மாற்றினார்.

ராஜபக்ஷவையும், அவரது குடும்பத்தையும் விரட்டும் முதல் துப்பாக்கி வேட்டை மக்கள் விடுதலை முன்னணியே தீர்த்தது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் எம்முடன் அதனை அச்சமின்றி எதிர்கொண்டார்.

எனினும், நாங்கள் அன்று சொன்னது இன்று உறுதியாகியுள்ளது. திருடர்களைப் பாதுகாக்கவா மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதிப் பதவியில் அமர்த்தினோம்?

62 இலட்சம் மக்களைக் காட்டிக்கொடுத்து விட்டு மைத்திரி எங்கே செல்கிறார்? இதனை உடனடியாக மாற்ற வேண்டியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி ஆட்சியினால் மாத்திரமே மக்களுக்கு உண்மையான உரிமைகளை வழங்க முடியும் எனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

## கிளி.பாரதிபுரத்தில்....

தகவலை அடுத்தே விசேட பொலிஸ் குழுவினால் சுற்றிவளைப்பு மேற்கொள் ளப்பட்டது.

இதன் போதே குறித்த கஞ்சா தொகை மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இப் பகுதியில் கடந்த காலங்களிலும் கஞ்சா உட்பட சட்ட விரோத போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் கிளிநொச்சி, பளைப் பகுதியில் 38 கிலோ எடை கொண்ட 40 இலட்சத்திற்கும் அதிகமான பெறுமதிமிக்க கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க. ...

நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்கவுள்ளது.

அதேவேளை, கொழும்பு, களுத்துறை, கம்பகா, காலி, மாத்தளை, கண்டி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் 12 அல்லது 13 இடங்கள், புதிதாக வந்து கூட்டணியில் இணைந்துள்ள அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்களுக்கு ஒதுக்கப்படவுள்ளன.

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் அத்துரலியே ரத்ன தேரருக்கு, ஐ.தே.க.வின் தேசியப்பட்டியலில் இடம் ஒதுக்கப்படவுள்ளது.

அதேவேளை, சம்பிக்க ரணவக்க கொழும்பிலும், ராஜித சேனாரத்ன களுத்துறையிலும், அர்ஜுன ரணதுங்க கம்பகாவிலும் ஐ.தே.க.வில் போட்டியிட நேற்றுக் காலை வேட்புமனுவில் கையெழுத்திட்டுள்ளனர்.

## ஆஸியில்...

சிட்னி வென்வர்த்துவில் என்னும் இடத்தில் நடந்த இந்தச் சம்பவத்தில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக 6 பேர் கைது செய்யப் பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் அதிக மதுபோதையில் வாகனத்தை செலுத்திய நிலையில், வாகனம் வேகக் கட்டுப்பாடை இழந்து வீட்டுக்குள் புகுந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒரு தமிழர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் வீடும் முற்றாக சேதமடைந்துள்ளது.

## தொடரை வென்றது இந்தியா



சிம்பாப்வே அணிக்கு எதிரான 2 ஆவது ஒரு நாள் போட்டியில் இந்தியா 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 2-0 என கைப்பற்றியது.

ஹராரேயில் நேற்று நடைபெற்ற 2ஆவது போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற சிம்பாப்வே களத்தடுப்பில் ஈடுபட்டது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ரகானே (63), முரளி விஜய் (72), ராயுடு (41) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 271 ஓட்டங்கள் எடுத்தது.

272 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சிம்பாப்வே களம் இறங்கியது. தொடக்க வீரர் சிபாபா ஒருபுறம் நிலைத்து நின்று ஆட மறுமுனையில் வந்த வீரர்கள் விரைவிலேயே பவிலியன் திரும்பினார்கள்.

சிபான்டா 2, மசகட்சா 5, சிகும்புரா 9, வில்லியம்ஸ் 20, சிகன்தர் ரசா 18 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர். அதன்பின் வந்த முடும்பாமி சிபாபாவுடன் ஜோடி சேர்ந்து ரன் உயர காரணமாக இருந்தார். அரைச் சதம் கடந்த சிபாபா 72 ரன்னில் அவுட் ஆக, முடும்பாமி 32 ரன்னில் அவுட் ஆனார்.

அதன்பின் சிம்பாப்வே அணி 49 ஓவர்கள் முடிவில் 209 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுக்களையும்இழந்தது.. இதனால் இந்தியா 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என கைப்பற்றியது. இந்திய வேகப்பந்து வீச்சாளர் புவனேஸ்வர் குமார் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.ஆட்டநாயகனாக முரளிவிஜய் தெரிவானார்.

## மத்தியுடன்...

சாங்கத்துடன் இணைந்து செயற்படும் வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும், நல்லிணக்கம், மீள்கட்டுமானம், புனர்வாழ்வு விடயங்களில் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும், நிஷா பிஸ்வால் எடுத்துக் கூறியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அங்கு உலக வங்கி அதிகாரிகளுடன் கூட்டங்களை நடத்தியுள்ளார்.

இந்தக் கூட்டம் தொடர்பான விபரங்கள் ஏதும் கிடைக்காத போதிலும், முதலமைச்சர் ஒருவர் அனைத்துலக முகவர் அமைப்பு ஒன்றுடன் நேரடியாகப் பேச்சு நடத்தியுள்ளது குறித்து கொழும்பில் கேள்விகள் எழுந்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அமெரிக்காவில் இருந்த போது, அவரது செயலகத்தினால் உலக வங்கியுடனான சந்திப்புக்கு அனுமதி கோரப்பட்டதாக, கொழும்பில் உள்ள உலக வங்கியின் பணியகம் தெரிவித்துள்ளது.

இத்தகைய சூழலில், சந்திப் புகளுக்கான கோரிக்கைகள் விடுக்கப்படும் போது, எப்போதுமே அதற்குச் சாதகமாக பதில ளிக்கப்படும்.

உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தற்போது வொஷிங்டனில் இருக்கிறார். அவரும், பிராந்திய உதவித் தலைவரும் முதலமைச்சரைச் சந்தித்திருக்கலாம். என்றும் கொழும்பில் உள்ள உலக வங்கியின் பணியகம் தெரிவித்துள்ளது.

சந்திப்புக்கான நோக்கம் அல்லது காரணங்களை அவர்கள் வெளியிடவில்லை

அத்துடன் காங்கிரஸ் உறுப்பினர் பில் ஜோன்ஸனுடன் அவர் மூடிய அறையில் பேச்சுவார்த்தையையும் நடத்தியுள்ளார். இதேவேளை, தமது பயணம் தனிப்பட்டது என்ற அடிப்படையில் அவர் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரனை சந்திக்கவில்லை என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வேட்பு....

மற்றும் சுயேட்சை குழுக்களிடம் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, பொதுத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கும் காலம் நாளை இரவுடன் நிறைவடையவுள்ளது.

இந்தநிலையில் இதுவரையில் அஞ்சல் வாக்களிப்புக்கு விண்ணப்பிக்காதவர்கள், தங்களின் விண்ணப்பங்களை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சியாளரிடம் நேரடியாக கையளிக்குமாறும் தேர்தல்கள் ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட தன் பின்னர் பேரணிகளை நடத்த முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனை மீறி செயற்படுகின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## ஓரிருவர்....

பலமாகவே இருக்கின்றோம். அத்துடன் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நிச்சயமாக வெற்றி பெற்று புதிய அரசாங்கமொன்றை அமைப்போம்.


இன்று எமது கட்சியிலிருந்து பிரிந்து சென்ற சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ளனர். இது குறித்து நாம் விமர்சனங்கள் எதனையும் கூற முடியாது. இவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்வது அவர் களின் தனிப்பட்ட முடிவாகும்.

இவ்வாறு இரண்டு மூன்று பேர் பிரிந்து செல்வதால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ பிளவுபட்டுவிட்டதாகக் கூற முடியாது.

தேர்தல் என்று வரும்போது கட்சித்தாவல்கள் இடம்பெறுகின்றமை வழமையாகும். இதனை நாம் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்றும் கூறினார்.

# அதிகாரத்திற்கு வராதென கூறிய பலர் ஐ.தே.க.வுடன் இன்று இணைவு

## என்கிறார் ஜோன் செனவிரட்ன



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினால் ஒரு போதும் அதிகாரத்தை கைப்பற்ற தெரியாதென கூறியவர்கள் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

சர்வதேச செய்திச் சேவையொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர்களின் எதிர்பார்ப்பாக இருப்பது எப்படியாவது அதிகாரத்தை பெற்றுக் கொள்வதெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒரு போதும் இணைய மாட்டேன, ஒன்றாக இணைந்து வேலை செய்யக்கூடிய திறன் காணப்பட்டாலும் ஐக்கியக் தேசிய கட்சிக்கு அதிகாரத்தை கைப்பற்றத தெரியாதென கூறிய ஜாதிக ஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்கவும், அத்துரலிய ரத்ன தேரரும் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பல கட்சிகள் அவ்வாறு இணைந்திருந்தாலும் அவ்வாறான கட்சிகளின் கொள் கைகள் முரண்பாடானவைகள் என்பதனால் அவற்றுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் அரசாங்கம் நிலையற்றதென அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட பாரிய அளவிலான நபர்கள் இணைந்துள்ளதாக தெரிவித்தார், சிலர் மாத்திரம் இணையாமல் இருப்பதென்றால் பாசாங்குத்தனம் மற்றும் தனிப்பட்ட காரணங்களினால் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.தே.க.வில் இணைந்தோர் தேர்தலின் பின் திரும்புவர்

## அமைச்சர் எஸ்.பி.நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டவர்கள் பொதுத் தேர்தலின் பின்னர் மீளவும திரும்பி வருவார்கள் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இருந்தவர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளனர்.

தேர்தலின் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேசிய அரசாங்கமொன்றை அமைக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தேசிய அரசாங்கத்தில் தற்போது விலகிச் சென்றவர்களும் இணைந்து கொள்வார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



சம்பிக்க ரணவக்க, ரத்ன தேரர் மற்றும் ராஜித சேனாரட்ன போன்றவர்கள் பாரிய சமூக மாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வெலே சுதா விடுதலை பெற்றால் அவருக்கும் கிடைக்கும் வேட்புமனு

## மாதுளுவாவே சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் வியாபாரம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள வெலே சுதா விடுதலையாகி இருந்தால் அவருக்கும் வேட்புமனு வழங்குவது இந்நாட்டு அரசி யல் கட்சிகளுக்கு பெரிய விடய மல்லவென நியாயமான சமூகத்திற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளர் மாது ளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

அரசியலில் இருந்து முழுமையாக வெளியேற நினைப்பதாகவும், நல்லாட்சி குறித்து பேசுவதில் இனி எவ்வித பயனும் இல்லையெனவும், ஊழல் மோசடி குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு வேட்பாளர்களாக களமிறங்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறந்த சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்புவதற்காக தான் மேற்கொண்டிருந்த போராட்டம் வீண் செயலாகியுள்ளதாகவும் இந்தத் தேர்தலில் யாருக்கும் ஆதரவு வழங்குவதால் எவ்வித



பயனும் ஏற்படப்போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், வெலே சுதாவை விடுதலை செய்திருந்தால் அவரை அமைச்சராக்குவது என்பது அரசாங்கத்திற்கு பெரிய விடயமல்லவெனவும், எதிர்பார்த்த நல்லாட்சியை ஏற்படுத்த முடியாமல் போயுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

காதலன் திருமணம் செய்ய மறுத்தமையால் தனக்குத் தானே பெற்றோல் ஊற்றித் தீ மூட்டிய பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் சிகிச்சை பலனின்றி நேற்றுக்காலை மரணமானார். யாழ்ப்பாணம் - அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த எஸ்.பகீரதி (வயது-26) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் கான்ஸ்டபிளாகப் பணியாற்றிய குறித்த பெண் அச்சுவேலி - இடைக்காட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காதலித்து வந்தார். அவரைத் திருமணம் செய்ய காதலன் மறுப்புத் தெரிவித்த நிலையில் கடந்த சனிக்கிழமை காதலனின் வீட்டுக்குச் சென்ற பெண் பொலிஸ் அவருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டார் எனத் தெரிய வருகின்றது.


இதனால் மனவிரக்தியும் ஆத்திரமும் அடைந்த குறித்த பெண் மோட்டார் சைக்கிளிலில் இருந்து பெற்றோலை எடுத்து தன் உடம்பில் ஊற்றி நெருப்பை பற்ற வைத்தார் எனத் தெரிய வருகின்றது.

அங்கிருந்தவர்கள் அவரைக் காப்பாற்றி யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக் காக சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுக் காலை மரணமானார்.

# இலங்கையில் தேடப்படுவோர் பாகிஸ்தானில் பிடிபட்டனர்

(கொழும்பு)

இலங்கையில் தேடப்பட்டு வரும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இருவரை பாகிஸ்தான் சிந்தா பொலிஸின் சிறப்பு விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.



கராச்சி மாலிர் ஹால்ட் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தாய்லாந்தைச் சேர்ந்த போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரும் இதன் போது கைது செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பல்லைப்பிடுங்குவதை விட இலகுவான வேலை ராஜிதவின் கட்சி தாவல்

## டளஸ் கிண்டல்



அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு கட்சி மாறுவது என்பது பல் ஒன்றைப் பிடுங்குவதை விட இலகுவான வேலை என முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப் பெரும கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ராஜித சேனாரத்ன அரசியலுக்கு வந்த நாளில் இருந்து இதுவரை 9 முறை கட்சி மாறியுள்ளார்.

லங்கா சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் கட்சி, வெகுஜன சுதந்திர முன்னணி ஆகியவற்றில் அங்கம் வகித்த அவர். மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வந்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதில் இருந்து மீண்டும் சுதந்திரக் கட்சிக்கும் தாவினார். தற்போது மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தாவியுள்ளார் என டளஸ் அழக பெரும குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன பல் மருத்துவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைப் பெண் தாக்கி பிலிப்பைன்ஸ் பெண் மரணம்

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் தொழில் புரிந்து வரும் இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண்ணொருவர் தாக்கியதில் மற்றுமொரு வீட்டுப் பணிப்பெண் உயிரிழந்துள்ளார.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான பெண் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஹஃஜிரா என்ற பிரதேசத்தில் இந்தப் பெண்கள் தொழில் புரிந்து வந்துள்ளனர். சம்பவத்தில் உயிரிழந்த பெண் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் என ஐக்கிய அரபு இராஜ்ஜிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதியுடனான அதிருப்தியே சந்திரிகாவின் லண்டன் பயணம்

## என்கிறர் அமைச்சர் விஜயதாஸ

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது ஏற்பட்ட அதிருப்தி காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளிநாடு சென்றதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலில் போட்டியிட வாய்ப்பை வழங்கியதால், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அதிருப்தியடைந்தார்.



மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் நடந்த ஊழல், மோசடிகளுக்கு அவர் பொறுப்புக் கூற வேண்டும் என்பதால், அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பை வழங்காது இருந்திருக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தான் அதிருப்தியடைந்த விடயம் குறித்து அவர் நாடு திரும்பியதும் அறிக்கையை வெளியிட வாய்ப்புள்ளது என்றும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.